# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

Honda 70 விற்பனைக்குண்டு 'சிவபதி', பொற்பதி லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில். 1577

Sharp 7 கலர் டெலிவிஷன் புதியது உடன் விற்பனைக்குண்டு K நடராசா, No. 7 செம்மாதெரு லேன், யாழ்ப்பாணம். 1574

ஒன்றரை மாத ஆர். ஐ. ஆர் கோழிக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. பொ. சச்சிதானந்தம், கால்நடை வைத்திய நிலையம், பருத்தித்துறை வீதி, கோப்பாய் வடக்கு. 1579

திருமண, குதுசோபன, ஏனைய வைபவங்களுக்கும் ஏற்ற பழரசங்கள் மொத்தமாக விற்பனைக்குண்டு. Jaftex Ltd, 222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1559

யாழ் மானிப்பாய் றோட்டில் ஆனைக்கோட்டை தபாலகத்திற்கு முன் இரண்டு மாடிக் கட்டிடம் வைத்திய நிலையத்துடன் விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம் ஞாயிறும் திங்களும் மாலை 4-00 — 6-00 மணிவரை தொடர்பு: மெடிக்கல் சென்ரர், ஆனைக்கோட்டை 1575

ஹொண்டா CB 125 10 ஸ்ரீ தொடரிலக்க மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. பார்வையிட சோதிநாதன், 6-ம் கட்டை, கட்டுடை, மானிப்பாய் 1556

நல்லூரில் அம்மன் வீதி முகப்புடன் வீட்டுக்கும், வர்த்தக நிலையத்திற்கும் ஏற்ற பரப்புக் காணி சுற்றுமதில் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 234, கோவில்வீதி (Temple Road) நல்லூர். 1567

கிளிநொச்சியில் 15 ஏக்கர் நெற்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: ரட்ணம், 28/2, கண்டி வீதி, சுண்டிக்குளி. 1545

யாழ் பெரியகடைக்கு அண்மையிலுள்ள கடைச்சாமி வீதியில், பாதுகாப்பான குடியிருப்புப் பகுதியில் இருபக்கம் புதிய சுற்றுமதிலிடப்பட்ட $1\frac{1}{2}$ பரப்புக் காணி விற்பனைக்குண்டு விபரம்: 19, கடைச்சாமி வீதி, நாவலர் வீதிக்கப்பால். 1547

L 300 டெலிக்கா 1980-ம் ஆண்டு மொடல் முற்றிலும் மறுசீரமைக்கப்பட்ட புத்தம் புதிய வான் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும்: மாணிக்கம் விக்கம் ஸ்ரோர்ஸ், கரடிப்போக்கு, கிளிநொச்சி. 1541

Dutsun Sunny B 310 விற்பனைக்குண்டு. க. நரேந்திரன் ஹரிவாசா, தாவடி றோட், மானிப்பாய். 1578

சாவகச்சேரி பெரிய மாவடியில், தென்னை, பனை, மா முதலிய வருமானமுள்ள ஆறு பரப்புக் காணி வீட்டுடனும் கிணற்றுடனும் விற்பனைக்கு உண்டு தொடர்பு முகவரி: கு. சாம்பசிவசர்மா, பெரிய மாவடி, சாவகச்சேரி 1521

மொறிஸ் 1000, பேர்ஜோ 404 (8 மீற்றர்) சொகுசு (டீலுக்ஸ்) நல்ல நிலையில் உள்ள வாகனங்கள் விற்பனைக்குண்டு A. பஞ்சலிங்கம், ஏழாலை மேற்கு, புனிதத்திரேசா வீதி, மல்லாகம். 1499

## விற்பனைக்கு

அதி உன்னதமான நிலையில் உள்ள 80ஸ்ரீ இலக்க Suzuki A 50 விற்பனைக்கு உண்டு ச. ஸ்ரீஸ்கந்தராஜா, நம். 15, 1-ம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம். 1558

கே. கே. எஸ். றோட்டில் குளப்பிட்டி சந்தி ஆனைக்கோட்டை வீதியிலிருந்து 200 யார் தூரத்தில் அமைந்துள்ள $2\frac{1}{4}$ பரப்பு சதுரக்காணி உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: T. S லோகநாதன் மணிரங்கம் 41, கோவில் பின்னியார் கோவில் வீதி, யாழ்ப்பாணம். போன்: 22630 (1512)

திருநெல்வேலி தெற்கில் நல்ல சுற்றாடலில் பல்கலைக்கழகம், புகையிரத நிலையம், பஸ் தரிப்பிடம், சந்தை என்பவற்றுக்கண்மையில் வசதியான ஒரு பரப்புக்காணி விற்பனைக்குண்டு விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 1482, கே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 1482

2-ம் கட்டை பலாலி வீதி திருநெல்வேலிச் சந்திக்கும் கலாசாலை சந்திக்கும் இடையில் றோட்டுக்கு கிழக்குப் பக்கத்தில் நான்கு எல்லையும் மதில்கள் கொண்டதுமான $1\frac{1}{2}$ பரப்பு விஸ்திரணமுள்ள வெறுங் காணி விற்பனைக்குண்டு பார்வையிட விரும்புவோர் இன்று காலை 8 மணிக்கும் பிற்பகல் 6 மணிக்குமிடையில் பார்வையிடலாம் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: க. பொன்னுத்துரை "அபிராமவனம்", திருநெல்வேலி தெற்கு, பலாலி வீதி யாழ்ப்பாணம். தொலைபேசி எண்: 24205. 1529

Morris Oxford Home delivery Car விற்பனைக்குண்டு Hiace அல்லது Delica வான் இவைகளுக்கு மாற்றவும் விருப்பம் உடன் தொடர்பு கொள்ளவும்: பொன்னம்பலம் அமெரிக்கன் மிசன் பாடசாலைக்கருகாமையில் வல்வெட்டித்துறை 1568

கொடிகாமம் சந்தைக்கு அருகாமையில் உள்ள ஒழுங்கையில் வீடு கட்டக்கூடிய 14 பரப்புத் தென்னங்காணி விற்பனைக்குண்டு: த. செ சிவபாதசுந்தரம், வெள்ளாம் புத்தூர் றோட், மீசாலை வடக்கு மீசாலை. 1585

கொடிகாமத்தில் பெரிய நாவலடி என்னும் இடத்தில் போக்குவரத்து வசதியுடன் 30 பரப்பு தென்னங்காணி விற்பனைக்கு உள்ளது தொடர்பு: பொ. தியாகராசா, இ. போ. ச. காப்பாளர், புதுறோட் (யோகரத்தினம் சைக்கிள் கடை) ஆயத்தடி, மிருசுவில். 1588

புதிய சொனி, (இருபது இஞ்சி-கலர்) ரீ வி. விற்பனைக்குண்டு தொடர்பு: 134, கிராமசேவகர் அலுவலகம், திருநெல்வேலி, கோப்பாய் 1587

இயக்கச்சியில் பன்னிரண்டு ஏக்கர் தென்னந் தோட்டம் விற்பனைக்குண்டு 6 ஏக்கரில் தென்னை நாட்டப்பட்டிருக்கின்றது கிணறு முண்டு விபரங்களுக்கு வே. முருகையா அடம்பன். 1590

தேவாலய வீதியில் வீடு விற்பனைக்குண்டு விண்ணப்பங்களுக்கு தொடர்பு: 120 தேவாலய வீதி, யாழ்ப்பாணம். 1598

## FOR SALE

Portable Tape Recorders 405 Casiotone Organ Chopper Cycle Iron Warm Clothes. 17/3, Kachcheri Nallur Road, Jaffna 1584

## WANTED

Recently passed out A M.P. seeks employment. Please apply Advt No 1543, C/o Eelanadu, Jaffna. 1543

Available Experienced Partly Qualified Accountant and Auditor presently employed in Colombo for immediate appointment in Jaffna Apply Advt No 1594, C/o Eelanadu, Jaffna. 1594

## வாடகைக்கு

சுன்னாகம் சந்திக்கு அருகாமையில் விசாலமான கடை வாடகைக்கு உண்டு. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல. 1576, ஈழநாடு, யாழ்ப்பாணம். 1576

## தேவை

ஒரு சிறிய குடும்பத்திற்கு யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் மின்சார, குழாய் நீர் உட்பட சகல நவீன வசதிகளும் அடங்கிய ஒரு வீடு உடன்தேவை. தகுந்த வாடகையும் முற்பணமும் கொடுக்கப்படும். விளம்பர இலக்கம்: 1554, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1554

றேடியோ ரெலிவிசன் பகுதிநேர தொழில்நுட்பவியலாளர் 28-3-84க்கு முன்பதாக விண்ணப்பிக்கவும்: S குமாரசாமி (Electronics Engineer KEEN INSTITUTE மணியம்ஸ் கட்டடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1572

ஐந்து வருட அனுபவம் உள்ள புடவை விற்பனையாளர்கள், மீன்பிடி அனுபவம் நிறைந்த விற்பனையாளர். பிணைப்பணம் எதிர்பார்க்கப்படுகின்றது) ஸ்ரோர்கீப்பர், கணக்குப்பிள்ளை தேவை, எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். மணிவல்ஸ், 16, நவீன சந்தை, யாழ்ப்பாணம் 1580

வீட்டு வேலைக்கும், சமையல் வேலைக்கும் 45—50 வயதுக்கு மேற்பட்ட ஆண் அல்லது பெண் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரடியாக விண்ணப்பிக்கவும். 23, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 1550

சேர்விஸ் பிரேசர் வேலையில் அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும். பரஸ்லோ நல்லூர். 1502

## பயிற்சி

மாலை நேர எலக்றிக்கல் வயறிங் - ஓட்டோ வயறிங் பயிற்சி வகுப்புகள் 30-03-1984-ல் ஆரம்பமாகின்றன இன்ஸ்ரியூட் ஒவ் எஞ்ஜினியரிங் ரெக்னொலொஜி 11B, கொப்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1511

## சேவை

கலர்பிலிம் கமெரா இரவல், மினி போட்டோ அல்பம் இலவசம். கலர் பிலிம் சுருள்களை இரண்டு நாட்களில் Processing Printing செய்ய கொழும்பு ஸ்ருடியோவை நாடுங்கள். மில்க் வீதி, பரமேஸ்வரா சந்தி, நேரில். 1582

திருமண பிறந்த நாள் கேக் வகைகளும், கட்லட், பற்றீஸ், றோல்ஸ், ஐஸ்கிறீம் மற்றும் சிற்றுண்டி வகைகளும் ஒருக்கு குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும் 617, K K S. வீதி, யாழ்ப்பாணம். 146, இலப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம் 1552

---

**புதிய பிரிவுகள் ஆரம்பம் 28-03-84**

**வெளிநாடுகளில் உடன் தொழில் பெற**

★ TELEX OPERATOR (INTERNATIONAL)
★ RADIO OFFICERS (SHIP) P M G
(P M. G. அரசாங்கப் பரீட்சை மே 1984]
★ ரெலிவிசன் ★ எலெக்றிக் வயறிங்
★ டிப்ளோமா இன் HOTEL MANAGEMENT
★ FRENCH / GERMAN

நவீன ஆய்வுகூட செய்முறைப் பரீட்சைகள்

விரிவுரையாளர்கள்: S. குமாரசாமி [எலெக்ரோனிக்ஸ் இன்ஜினியர்]
A. செல்வநாயகம்

**KEEN INSTITUTE**

[நிர்வாகிகள் - எலெக்ரோனிக்ஸ் அக்கடமி]
மணியம்ஸ் கட்டடம், இரும்பியடி ஒழுங்கை,
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1571

---

**கறவையாளர் தேவை**

பத்து உயர் இன பசுக்களை பராமரித்து அவற்றில் பால் கறக்கக்கூடிய திடகாத்திர தேகமுடைய அனுபவம் மிக்க இந்திய வம்சாவளியினர் ஒருவர் தேவை வயது 30 — 50 வரை. உடனே தேசிய அடையாள அட்டையுடனும் கிராமசேவகரின் அத்தாட்சிப்பத்திரத்துடனும் நேரில் விண்ணப்பிக்கவும். தகுதி வாய்ந்தவருக்கு தக்க சம்பளமும் சன்மானமும் உண்டு. முகவரி;

**மருதம் பால் பண்ணை**

(கப்பல் கம்பனிக்கு அருகாமையில்)
தம்பசிட்டி, பருத்தித்துறை. (1542)

---

**கோப்பாய்த் தொகுதி மக்களுக்கு**

**ஓர் நற்செய்தி**

நீங்கள் இனிமேலும் போட்டோஸ்ரற் பிரதிகளுக்காக பணத்தையும், நேரத்தையும் (போக்குவரத்து) விரயமாக்க வேண்டியதில்லை. உங்களுக்கு மலிவான விலையில் விரைவாக போட்டோஸ்ரற் பிரதிகள் செய்துகொள்ள நாடவேண்டிய இடம்;

**விஜயலங்கா எக்ஸ்போட்ஸ்**

**அன் கொன்றுக்ஸ் கம்பனி**

பருத்தித்துறை வீதி,
(உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்துக்கு முன்பாக)
கோப்பாய். 1525

---

**யாழ். இந்துக் கல்லூரி**

**பழைய மாணவர் சங்கம்**

யாழ். இந்துக்கல்லூரி அதிபர்
திரு. P. S. குமாரசாமி அவர்கள்
சேவையிலிருந்து இளைப்பாறியதையிட்டு
பிரியாவிடை வைபவம்
(31-03-84) சனிக்கிழமை மாலை 4-30 மணியளவில்
கல்லூரி விடுதிச்சாலை மண்டபத்தில்
நடைபெறவுள்ளது.

சகல பழைய மாணவர்களும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

★ வருடாந்த பொதுக்கூட்டம் 7-4-84 சனிக்கிழமை காலை 9-00 மணியளவில் நடைபெறும். அங்கத்தவர்கள் தவறாது சமுகமளிக்கவும்.
★ புதிதாக சேரவிரும்பும் பழைய மாணவர்கள் உடன் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.
★ பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்புவோர் 1-4-84க்கு முன்னர் செயலாளருடன் எழுத்து மூலம் அறிவிக்கவும். இதன்பின்னர் பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது

செ இ இராகுலன்,
செயலாளர்.
532, கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22633 (1505)

---

**மரண அறிவித்தல்**

**கனகசபை இராமலிங்கம்**

மாதகல் விபுலாநந்தர் வீதியைச் சேர்ந்த கனகசபை இராமலிங்கம் காலமானார். அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டியின் அன்புக் கணவரும், தம்பிப்பிள்ளை (இ போ ச முன்னாள் நடத்துனர்), கனகரத்தினம் (பிரபல வர்த்தகர் - சங்கானை), திருமதி சதாசிவம் நாகம்மா, காலஞ்சென்ற செல்லத்துரை, சின்னராசா (பிரபல வர்த்தகர் - பண்டத்தரிப்பு), சிவரத்தினம் (பொலிஸ் உத்தியோகத்தர் சாவகச்சேரி), பொன்னையா (தொலைபேசி இயக்குநர் யாழ் கல்வித் திணைக்களம்), ஆறுமுகம், கந்தையா (ப நோ கூ சங்கம் பண்டத்தரிப்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25-3-84 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3-00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று மாதகல் மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். 1593

வார மலர்
ஈழநாடு
லங்கா
EELANADU VARAMALAR

[இலங்கைச் சர்வகலாசாலைக்கு முன்னோடியாக விளங்கிய இலங்கைச் சர்வகலாசாலைக் கல்லூரியில் (University College) ஓர் இந்து இளைஞர் சங்கம் செயற்பட்டது. அதனாதரவில் கொழும்பில் நிகழ்த்தப்பட்ட பேருரையின் தமிழாக்கம் இது. இந்துபோட் இராசரத்தினம் அவர்கள் நூற்றுக்கணக்கான சைவப்பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்த ஒரு செயல்வீரர் மாத்திரம் அன்றி ஒரு சிறந்த கல்விமான் என்பதும் இப்பேருரை மூலம் தெரியவருகிறது. இப்பேருரை 1930-ம் ஆண்டு வெளிவந்த சைவசித்தியாவிருத்திச் சங்க முதல் அறிக்கையின் பிற்சேர்க்கையாகக் காணப்படுகிறது ]

# யாழ்ப்பாணத்தில்

# இந்துக்களின்

# கல்வி வரலாறு



இந்துக்களின் சரித்திரம் முழுவதையும் உற்று நோக்கும்பொழுது அவர்களின் சிறந்த பண்பு அறிவைத்தேடுவதில் இருந்த ஆர்வமே ஆகும் என்பது தெளிவு. இந்த அறிவு கடவுளைப்பற்றியும் உலகியலைப் பற்றியும் இருக்கும் கல்விமான்கள் மிகவும் உயர்ந்த நிலையில் வைக்கப்பட்டு ஞானிகளைப் போல் வழிபடவும் பட்டனர். தமது முன்னோர், ஒருவனிடம் எவ்வளவுபொருள் இருந்தது என்பதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஒருவனுடைய ஒழுக்க முங்கல்வியுமே அவரை மக்களின் அன்புக்கும் மரியாதைக்கும் வணக்கத்துக்கும் உரியவன் ஆக்கின. ஞானதானமே சிறந்ததானமாகக் கருதப்பட்டது. இப்படியான ஒரு தேசத்தில் ஒப்பியல் முறையில் கல்விமுறைகளை ஆராய்ந்த அறிஞர்களின் மதிப்பைப்பெறும் ஒரு கல்வி முறையை அவர்கள் வகுத்தனர் என்பதில் ஒரு அதிசயமுமில்லை. உலகப்புகழ்பெற்ற சர்வகலாசாலைகளையும் இந்துக்கள் தாபித்தனர். பிராமணர் பிராமணப்பள்ளிக்கூடங்களையும் சத்திரியர் சத்திரியப் பள்ளிக்கூடங்களையும், வைசியர் வைசியப்பள்ளிக் கூடங்களையும் தாபித்தனர். இங்கு அவ்வக்குலத்துக்குரிய தர்மசாத்திரங்கள் போதிக்கப்பட்டன. இவற்றுக்கு மேலாக எல்லோருக்கும் பொதுவான பள்ளிக்கூடங்களும் அவற்றுக்குரிய ஆசிரியரும் இருந்தனர். கைத்தொழில்களும் வீட்டுப்பணிகளும் இளைஞர்களுக்குப் போதிக்கப்பட்டன.

பிராமணக்

கல்விமுறைபற்றி கீ

வணக்கத்துக்குரிய கீ [Keay] என்பவர் தமது பண்டைய இந்தியக் கல்வி என்னும் நூலில் பின்வருமாறு கூறியுள்ளார்.

## ✯ இந்துபோட் சு. இராசரத்தினம்

"மைமதியக் கல்விமுறையைப்போல அதோடு பல முறைகளில் ஒத்திருந்த பிராமணக் கல்விமுறை ஐரோப்பாவில் மறுமலர்ச்சி ஏற்படுமுன் இருந்த கல்விமுறைக்குச் சற்றும் குறைந்ததல்ல. பிராமணக் கல்விமுறை ஏகாதிபத்தியங்களின் வீழ்ச்சியையும் சமூதாய மாற்றங்களையும்மீறி நின்றுபிடித்ததோடு உலகம் போற்றும் சிந்தனையாளரையும் தோற்றுவித்துள்ளது."

பிராமண பௌத்த சமயக் கல்வியோடு (இவை ஒரு சிலருக்கே பயன்பட்டது) பிராமணரல்லாத மக்களுக்கென்ப் பொதுவான ஒரு கல்விமுறை இருந்து வந்திருக்கிறது. இக் கிராமப் பள்ளிக்கூடங்களில் வணிகருக்கும் விவசாயிகளுக்கும் தேவையான வரலாறு, எழுத்து, கணிதம் முதலிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

போர்த்துக்கேயர்காலக்

கல்வி

போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றுவதற்கு முன்னர் இங்கு நடைமுறையில் இருந்த கல்விமுறை இந்தியக் கல்விமுறையை ஒத்திருந்தது. போர்த்துக்கேயர் வருமுன் யாழ்ப்பாணத்தில் ஐந்நூற்றுக்குமேற்பட்ட கோயில்கள் இருந்தன. இக்கோயில்கள் விலும் அவற்றைச் சேர்ந்த மடங்களிலும் சைவ நூல்களும் புராணங்களும் கற்றோர்க்கும் கல்லாதவர்க்கும் பயன்படும் முறையில் போதிக்கப்பட்டன. யாழ்ப்பாணத்தில் பிராமணப் பள்ளிக்கூடங்களும் (இந்துசமயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது) கிராமப் பள்ளிக்கூடங்களும் இருந்தன. வைத்தியக் கல்வியும் விருத்தியடைந்திருந்தது. சித்திரம், கைத்தொழில் தொழில்முதலியன பரம்பரையாகத் தகப்பனால் மகனுக்குக் கற்பிக்கப்பட்டது. கவிஞர்களும் கல்விமான்களும் சிறந்து விளங்கினர். அரசகேசரி இரகுவமிசத்தையும் செகராசசேகரனும் பரராசசேகரனும் முறையே செகராசசேகரத்தையும், பரராசசேகரத்தையும் எழுதினர்.

1831ம் ஆண்டில் வெளிவந்த கோணல்கோல்புறூக் என்பவரின் அறிக்கையில் யாழ்ப்பாணத் தமிழர் தமது பழக்க வழக்கங்களையும் கல்வி முறையையும் இந்தியாவிலிருந்து கொண்டு வந்தனர் எனக்கூறியுள்ளார்.

உதவியவர்:
ச. அம்பிகைபாகன்

ஆங்கில ஆட்சியின்கீழ்

இந்துக்களின் கல்வி

ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றியதும் தாங்கள் சமயங்கள் எல்லாவற்றையும் சமத்துவமாக நடத்துவதெனப் பிரகடனப்படுத்தினர். இந்துப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டுப் பல்கிப் பெருகின. இந்து ஆசிரியர்கள் வெளிப்படையாகத் தங்கள் கடமைகளைச் செய்தனர். ஆனால் இவர்களுக்குப் பல முட்டுக்கட்டைகள் இருந்தன. 1834ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் 230 இந்துப் பாடசாலைகளும்,

(14-ம் பக்கம் பார்க்க)

# இலங்கை-இந்திய

# அரசியல் சதுரங்கம்

யாழ்ப்பாண அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையாவுக்கு அளிக்கப்பட்டுவரும் பிரியாவிடைகள் யாவும், "திரும்பி வாருங்கள்" என்ற உளங்கனிந்த வேண்டுகையில் முடிகின்றன.



இது Farewell அல்ல; Au revoir அதாவது மீண்டும் சந்திப்போம் என்பதாகும்.

இதற்குக் காரணம் உண்டு. இந்த இந்து மாநிலத்தில்- சாதி குலம் மதம் போன்ற செருக்குகள் நிறைந்த யாழ்ப்பாணத்தில் - இவற்றில் பிறந்த ஒரு வைதிக கிறிஸ்தவ குடும்பத்தின் பெருமகன் பாரபட்சமற்ற, துவேஷமற்ற எல்லோருடைய அன்பையும் சம்பாதித்து நிர்வாகத்தை மிக நெருக்கடியான காலத்தில் நிறைவேற்றியிருக்கிறார்.

இந்த நாட்டுக்கு ஒரு மதசார்பற்ற (secular) ஆட்சி உருவாகுமானால் திரு. தேவநேசன் போன்ற திறமைசாலிகளுக்கு அதன் நிர்வாகத்தில் முக்கிய இடமுண்டு.


இன்று இங்கு பேசப்படும் தமிழ் இளைஞர் தகராறு ஒரு போர்க்கோலம் கொண்டிருப்பது விசனத்துக்குரியது. தமிழ் நாட்டையும் இந்தியாவையும் கொழுவிப் பிடிக்கும் அளவிற்கு இலங்கைப் பாராளுமன்றப் பேச்சுக்கள் குறிப்படுகின்றன.

உண்மை விடயம் அறியாது பாரதத்தை இழுப்பது உசிதமல்லவென்று எதிர்க்கட்சித் தலைவர் அனுரா நல்ல ஆலோசனை வழங்கியிருக்கிறார். ஒரு பொறுப்புடைய அமைச்சர் புதுடில்லியில் பிரதமர் இந்திராவைச் சந்திப்பது முக்கியமெனகிறார் அனுரா.

இலங்கைச் சதுரங்கக் (chess) கோஷ்டிக்குத் தலைமை தாங்கிப் பாரதம் சென்ற திரு. தேவநேசன் நேசையா புதுடில்லியில் நடைபெறக்கூடிய அரசியல் சதுரங்கத்தில் மிகத் திறமையாக விளையாடக் கூடியவர் என்ற நம்பிக்கையில் அவரில் விசுவாசம்கொண்ட அரசு அவரையும் கூட்டிச் செல்வது நலம்.

சகல மருந்துவகைக்கும் பாவனையாளர் பொருட்களுக்கும்
யாழ்ப்பாணம் ஒட்டோஸ்லிமிட்டெட் (Autos Ltd) வழங்கும்
விசேட சலுகை
ரூபா 50க்கு உட்பட்ட கொள்வனவுக்கு 3% விலைக்கழிவு...!
ரூபா 50க்கு மேற்பட்ட கொள்வனவுக்கு 5% விலைக்கழிவு...!!
(சலுகை வைசிப்பு உள்ளவரை மட்டுமே)
ஒட்டோஸ் லிமிட்டெட் (AUTOS LTD.)
190, ஆஸ்பத்திரி வீதி, [1551] யாழ்ப்பாணம்.

★ ஸ்பெயின் ★ இத்தாலி ★ பிரான்ஸ்
சகாய விலையில் ரிக்கட்டுகளுக்கும்
பிரயாண ஒழுங்குகளுக்கும்
AIR-TRANSIT
TRAVEL CONSULTANTS
99-2/56 B, கபூர் பில்டிங் 2-வது மாடி கொழும்பு-1. போன்: 549365
538 B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 22689
[1570]



"இவ்வளவு உயரத்திற்கு அடிப்பதற்கு யாரோ நல்ல 'சுகி பௌலராக' வரச்சிருக்க வேணும்!..."



"அயலில் வீட்டுக்காரன் பரம 'கிரிக்கட்' ரசிகர் என்று சொன்னேனே, பார்த்தீங்களா?..."

# யாழ்ப்பாணத்தில் சத்தியாக்கிரக - மறியல் போராட்டம்!

**1960ம்** ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலின்போது அரசியலில் சடுகுடு விரும்பாது ஒதுங்கியிருந்த திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கணவரின் வற்புறுத்தல் காரணமாக 1960ம் ஆண்டு ஜூலையில் சுதந்திரக்கட்சியின் தலைமையை ஏற்றுக்கொண்டார். தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டார்.

தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி மிகப் பெரும்பான்மைப்பலத்துடன் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தது.

தமிழ்அரசுக் கட்சியின் உதவி தேவைப்படாமல் போயிற்று!

### கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு

1960ம் ஆண்டு மார்ச்மாதம் திருமதி சிறிமா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் ஆட்சிபீடத்திலமர்ந்ததன் தலைவர்களும் மறந்து விட்டனர்.

எனவே 1960ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ந் திகதி காந்திமகான் நினைவு தினத்தில் தாம் புதிய போராட்டம் நடத்தப்போவதாகத் தெரிவிக்கும் பிரசுரங்களைத் தமிழ் அரசுக்கட்சித் தலைவர்கள் விநியோகித்தனர்.

ஒரு மாதத்தின்பின் யாழ்ப்பாணக் கச்சேரி வாசலிலும் தொடர்ந்து தமிழ்ப்பகுதிகளிலுள்ள கச்சேரி வாயில்களிலும் மற்றும் அரசாங்க அலுவலகங்களின் வாசல்களிலும் சத்தியாக்கிரகமும் மறியல் போராட்டமும் நடத்தியது தமிழ் அரசுக்கட்சி. இது சுமார் மூன்று மாதங்களுக்கு மேல் நீடித்தது.

சற்றில் சத்தியாக்கிரகம் கலைக்கப்பட்டு முடிவுக்கு வந்தது.

ரான திரு. பி. டி. சில்வாவும் மற்றும் சிலரும் தங்கள் அமைச்சர் பதவிகளை ராஜினாமாசெய்ததுடன் அரசியலில் இருந்து வெளியேறி எதிர்க் கட்சியினருடன் சேர்ந்து கொண்டனர்.

1964ம் ஆண்டில் திருமதி சிறிமா பண்டாரநாயக்காவைத் தலைவராகக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசும் கவிழ்ந்தது

### ★ எஸ். எம். கோபாலரத்தினம்

### இடதுசாரி இயக்கங்கள்

1964ம் ஆண்டில் திருமதி சிறிமா தலைமையிலான அரசு வீழ்ச்சியடைந்தபோது இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சி அரசை ஆதரித்துக்கொண்டிருந்தது.

## 1960-ல் தமிழரசின் உதவி தேவைப்படாததால் சுதந்திரக்கட்சி அதனை பகிஷ்கரித்தது பேச்சுவார்த்தையில் காணப்பட்ட இணக்கமும் தேவைப்படவில்லை

பின் முற்போக்குக் கொள்கையைக் கொண்டுள்ள சுதந்திரக் கட்சி, அரசுக்கு ஆதரவு கொடுப்பதென்று இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியின் தலைமைபீடம் தீர்மானித்தது.

மார்ச்மாதத் தேர்தல் நடைபெறுவதற்கு முன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சித் தலைவர்களுக்கும் சுதந்திரக்கட்சியின் தலைவர்களில் ஒருவராக விளங்கிய திரு. சி. பி. டி. சில்வா குழுவினருக்குமிடையில் பேச்சுவார்த்தை நடைபெற்றிருந்தது. தமிழ் மக்களின் உரிமைகள் சம்பந்தமாக இப் பேச்சுவார்த்தைகளின்போது சில இணக்கமும் ஏற்பட்டிருந்தது.

தமிழரசுக்கட்சியின் உதவி 1960 ஜூலை தேர்தலின்பின் தேவைப்படாததால் அப் பேச்சுவார்த்தையை அரசும்

1962ம்ஆண்டில் திருமதி ஸ்ரீமா அரசுக்கு எதிராகப் புரட்சிச்சதிமுயற்சி நடைபெற்றதாகக் கண்டுபிடிக்கப்பட்டு பல உயர் அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டனர். இப் புரட்சிச்சதி வழக்கு விசாரணையும் நீடித்தது

### சி. பி. டி. சில்வா குழு விலகியது

இதன்பின் 1964ம் ஆண்டில் ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சிக்குள் பூசல் ஏற்பட்டது.

பத்திரிகை கட்டுப்பாட்டு மசோதா கொண்டுவருவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டன. இச் சமயத்தில் சுதந்திரக்கட்சியின் ஸ்தாபக தலைவர்களில் ஒருவ

லங்காசமசமாஜக் கட்சியும் தனது ஆதரவை திருமதி சிறிமா தலைமையிலான சுதந்திரக்கட்சிக்கு அளிக்கமுன்வந்தது. எதிர் படுபிற்போக்கான ஐக்கியதேசியக் கட்சியுடன் ஒப்பிடும்போது சுதந்திரக் கட்சி முற்போக்குக் கொள்கைகளைக்கொண்டதென்பது கம்யூனிஸ்ட், சமசமாஜக்கட்சிகளின் கொள்கை.

மொழிப் பிரச்னையில் சமத்தகுதிக் கொள்கையையே கம்யூனிஸ்ட்கட்சியும் லங்கா சமசமாஜக்கட்சியும் தொடர்ந்து பின்பற்றிவந்தபோதிலும் வடக்கில் இக் கட்சிகளுக்குப் போதிய ஆதரவு கிடைக்காதது தலைமைப்பீடத்துக்குப் பெரும் ஏமாற்றம். இதனால் மெதுவாக சமசமாஜக்கட்சியும் மொழிப்பிரச்னையில் தனது போக்கைமாற்றிக்கொண்டது.

### சமரக்கொடி புதிய கட்சி

லங்காசமசமாஜக்கட்சி தலைமைப்பீடத்தில் ஏற்பட்ட கருத்துவேறுபாடு காரணமாக திரு. எட்மன்ட் சமரக்கொடி லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து வெளியேறி புரட்சிவாதசமசமாஜக்கட்சி என்னும் புதிய கட்சியை ஆரம்பித்தார். திரு. பாலா தம்புவும் திரு எட்மன் சமரக்கொடியும் சில காலம் ஒன்று சேர்ந்திருந்தபோதிலும் இந்த ஐக்கியம் நீடிக்கவில்லை.

### இடதுசாரிகள் மேலும் பிளவு

1964ஆம் ஆண்டில் இலங்கையில் இடதுசாரி இயக்கங்கள் மேலும் பிளவுபட்டன. 1963ஆம் ஆண்டில் இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையில்


# Trust Travel Service
## ரஸ்ற் ரவல் சேர்விஸ்

தலைமை அலுவலகம்

| | |
|---|---|
| 11/A, மொடீசக்கட்டிடம், | ஏஹறிராமணி ஆர்காட் |
| ஸ்ரான்லி வீதி, | 65, சதாம் வீதி, |
| யாழ்ப்பாணம். | கோட்டை. |
| T. P. 24111 | T. P. 548409, 548811 |

★ ALITALIA விமானத்தில் மோல்டா செல்வதற்கு 22000/- (போய்வர இருவழி)

★ உங்கள் விமான டிக்கட்டுகளை குறைந்த செலவில் யாழ்நகரில் பதிவு செய்து கொள்ளலாம்.

★ AERO FLOT, C. S. A., AIR LANKA விமான டிக்கட்டுகளில் விசேட கழிவு தரப்படும்


## இலங்கை அரசியலில் உறவுகளும் பிரிவுகளும்-5

எல்லைச் சண்டை ஏற்பட்ட சமயத்திலேயே சோவியத் யூனியனுக்கும் சீனாவுக்குமிடையே கம்யூனிஸ சித்தாந்தக் கருத்து மோதல் ஆரம்பமாகிவிட்டது. இந்தக் கம்யூனிஸ சித்தாந்த மோதல் 1964ம் ஆண்டில் கம்யூனிஸ உலகில் பிளவை ஏற்படுத்தியது. இதன் விளைவாக இலங்கையிலும் கம்யூனிஸ்ட் கட்சியில் பிளவேற்பட்டது.

டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, திரு பீட்டர் கெனமன் குழுவினர் ஒரு பிரிவாகவும், திரு என். சண்முகதாசன் குழுவினர் மற்றொரு பிரிவாகவும் வேறுபட்டனர். டாக்டர் விக்கிரமசிங்கா, கெனமன் குழுவினர் சோவியத் யூனியனை ஆதரித்தனர். இவர்களுடைய கட்சி மாஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியென்று அழைக்கப்பட்டது. திரு சண்முகதாசன் குழுவினரின் கட்சி பீகிங் சார்புக் கம்யூனிஸ்ட் கட்சி என்று அழைக்கப்பட்டது.

### 1965-ல் நடந்த பொதுத் தேர்தல்

இடதுசாரி இயக்கங்கள் பிளவுபட்டிருந்த இச்சமயத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் சுதந்திரக் கட்சி அரசு கவிழ்ந்ததும் 1965ஆம் ஆண்டில் பொதுத் தேர்தல் வந்தது.

இடதுசாரி இயக்கங்களில் ஏற்பட்ட பிளவு திரு டட்லி சேனநாயக்காவைத் தலைவராகக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பொதுத் தேர்தலில் வெற்றியைத் தேடிக் கொடுத்தது. ஆட்சி அமைப்பதற்குத் தேவையான பெரும்பான்மைப்பலம் டட்லியின் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்தது.

ஆனாலும் திரு. டட்லி சேனநாயகா ஒரு ''தேசிய அரசாங்கம்'' அமைக்க முன்வந்தார். இதற்கு அவருக்கு ஆதரவு கிடைத்தது.

### தமிழரசும் சேர்ந்தது

எந்தக் கட்சியின் அரசிலும் சேர்ந்து ஒத்துழைப்புக் கொடுப்பதில்லை என்று கூறிவந்த தமிழரசுக்கட்சி திரு. டட்லியின் தேசிய அரசுக்கு ஒத்துழைப்புக் கொடுத்தது. கட்சியின் எம். பி.க்கள் எவரும் அமைச்சர் பதவியை ஏற்றுக்கொள்வதில்லையென்று முடிவுசெய்து, திரு. எம். திருச்செல்வம் கியூ. ஸி. யை அமைச்சராக்கியது. பிரதமர் டட்லி சேனநாயகாவும் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி மாவட்ட சபைகள் அமைப்பதற்கான மசோதாவைத் தயாரித்து நிறைவேற்றுவதற்கு வசதியாகத் திரு. எம். திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சர் பதவியை ஏற்றார்.

இலங்கையில் சோஷலிஸத்தின் தந்தை என்று வர்ணிக்கப்பட்ட திரு. பிலிப் குணவர்த்தன திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா அமைச்சரவையிலிருந்து வெளியேறிய பின் மகாஜன ஐக்கிய முன்னணிக் கட்சியை ஆரம்பித்திருந்தார்.

இக்கட்சியில் போட்டியிட்டு வெற்றியீட்டிய திரு பிலிப் குணவர்த்தனவும், எம். பி. பி. சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டிய டபிள்யூ தஹநாயகாவும் திரு டட்லியின் தேசிய அரசில் சேர்ந்து ஒத்துழைப்புக் கொடுத்தனர். தமிழ்க் காங்கிரஸ் தலைவர் தேசிய அரசில் சேர்ந்து ஒத்துழைப்புக்கொடுத்தார். ஆனால் அமைச்சர் பதவி எதையும் ஏற்கமறுத்துவிட்டார்.

(தொடரும்)

### ஓர் ஆணி

ஓர் ஆணி ஒரு லாடத்தைக் காக்கும்; ஒரு லாடம் ஒரு குதிரையைக்காக்கும்; ஒரு குதிரை ஒரு வீரனைக் காக்கும்; ஒரு வீரன் நாட்டையே காப்பான்.

— துருக்கியப் பழமொழி

## சிந்தனைக்கு ஓர் அறிஞன்



செந்தமிழும் ஆங்கிலமும் தெளிவுறவே
கற்றறிந்தான் சேவமிக்கோன்
சந்ததமும் காந்திநெறி தனைப்போற்றும்
சால்புடையோன் இயற்கையாகச்
சிந்தனைசெய் ஆற்றலினோன் சிறக்கும்
பரம்பரையை ஆக்கிவைத்தோன்
வந்தனைக்கே உரிய எங்கள் ஹண்டி எனும்
பண்புமிகு வல்லோன்தானே

தேசியத்திற் பற்றுவைத்தே தேசமென்றும்
முன்னேற உழைத்தல்செய்தோன்
பெருமுயர் கொள்கைவழி வினாமல்
நின்றிட்ட நேர்மையாளன்
பாசமுடன் தமிழினத்தின் முன்னேற்றம்
குறித்தென்றும் முயன்ற மேலோன்
பெரும்புகழ்நலன் அனைத்தும் தன்னகத்தே
கொண்டிருந்த பெருமையாளன்.

ம. பார்வதிநாதசிவம்

● அறிஞர் ஹண்டி எஸ். பேரின்பநாயகம் நினைவு தினம் இன்று

எஸ்.பி.கிருஷ்ணன்



# வாழ்வை வசந்தமாக்கி...

"இவர் ஒரு ஆசிரியர். பெயர் நல்லதம்பி. நல்ல சொத்துப் பத்து இருக்கிறது; வயல், தென்னந்தோட்டம், வீடு, வளவு, மாடு ஆடு எல்லாம்..

"மனைவியை இழந்து விட்டார்..."

"பிள்ளைகளும் இல்லை..."

"நீங்கள் ஒரு, சமூகத் தொண்டன் என்ற வகையில் இப்படிக் காரியத்தைச் செய்வீர்கள் என்ற நம்பிக்கையோடுதான் இவரைக் கூட்டிக் கொண்டு வந்தன்..."

"இவருக்கு ஒரு துணை தேவை... ஐம்பது வயதுக்குள்... பிள்ளைகள் ஒன்று இரண்டு இருந்தாலும் பரவாயில்லை... காணிபூமியைக் கவனிக்க... பாவம் கடைச்சாப்பாடும் வீட்டு வேலையுமாக... கஷ்டப்படுகிறார். இருக்கிற சொத்தில் ஒரு பகுதியை உங்கள் அறப்பணி மன்றத்திற்கு நன்கொடையாக எழுதித் தருவார்..."

சந்திரபுரம் அறப்பணி மன்றத்தலைவர் தம்பையா, மெல்லச் சிரித்துவிட்டு, கேட்டார் -

"இவருக்கு என்னவயசு..?"

"ஐம்பத்தேழுதான்... அப்படித் தோற்றமில்லை..."

"அப்ப பென்சன் எடுக்கிறாரோ...?"

"இல்லை. இவருக்கு இரண்டு 'எக்ரென்சன்' கொடுத்தார்களாம். அதற்குப் பிறகும் விண்ணப்பித்தார் கொடுக்கவில்லையாம்... அறுபது வரைக்கும் சிலருக்கு 'எக்ரென்சன்' கொடுத்திருக்கிறார்கள்.... இவரும் திடகாத்திரமானவர்...... தகுதி உள்ளவர்... பள்ளிக்கூட வேலை தொடர்ந்து இருக்குமென்றால் ஓரளவு காலத்தை மகிழ்ச்சியாகக் கழிக்கலாம் என்கிறார்... அவர் சொல்லுவதும் சரிதான்..."

"பந்தபாசம் இல்லாத மனிதன் அப்படியொருதொழிலை மனநிறைவோடு செய்வான் என்பது உண்மைதான்... ஆனால் சட்டதிட்டங்கள் நாம் விரும்புகிற காரியங்கள் எல்லாவற்றிற்கும் சாதகமாக இருக்குமோ..."

"இவர் ,மினிஸ்ரிக்கு' மேன்முறைப்பாடு செய்திருக்கிறார்......

"அப்படியா...?"

"ஓம்... ஐயா... ஆனால் எங்களைப் பொறுத்தவரை அவர்களும் உடனடி நடவடிக்கை எடுப்பார்களென்று எதிர்பார்க்க முடியாதே..."

"சரி. நான் யோசித்துச் சொல்லுகிறேன்..."

"இந்த அலுவலை முடித்து வைத்தால் உங்களுக்கும்..."

"எனக்குத் தேவையில்லை.."

,'அதல்ல... உங்கள் அறப்பணிக்கும் நிதிசேரும் அல்லவா...? நீங்கள் விரும்பினால் அவர் எழுதுகிற காணியை விற்றுவங்கியில் போடலாம், மன்றத்தின் பேரிலை..."

"சரி... நான் முயற்சிக்கிறன்...

"நாங்கள் வருகிறம்..."

"நல்லது..."

ஒருகிழமை கழித்து நான் அவரிடம் போனபோது-

',வணக்கம் ஐயா..."

"வணக்கம்... வாரும்... எப்பிடி...?"

"நான் கதைத்த... அந்த மாஸ்ரர் அலுவல்பற்றி..."

"நான் இன்னும் அதைப் பற்றி யோசிக்கவில்லை... நேரமில்லை"

"ஏன் ஐயா அந்த அலுவலைக் கூடிய கெதியிலை முடித்து வைத்தால் உங்கள் மன்றத்திற்கும் பெருமைதானே... அவரிடத்திலை பெருவாரி காணி நிலம் இருக்கு... நான் தலையிட்டுக் கூடியளவு நிலத்தை உங்கள் நிறுவனத்திற்கு எழுதி வைக்கச் செய்கிறன்... அவர் இதற்காக மதம் மாறவும் யோசித்தவர்... எங்கள் மதம் இதற்கெல்லாம் இடம் தராது என்ற முடிவுக்கு வந்து விட்டார்... நான்தான் தடுத்தேன் . எங்கள் மதத்தைக் காட்டிக் கொடுக்கக் கூடாது... நான் உங்கள் விருப்பத்தை நிறைவேற்றி வைக்கிறேன் என்று உறுதியளித்திருக்கிறன்..."

"அது சரி...அவருக்கு வயது ஐம்பத்தேழு... அந்தக் கிழவரோடே இருக்க ஆர் வரப் போகிறாள்...?"

"அவருக்குப் பின்னால் கிடைக்கப் போகும் பென்சனுக்காக... இப்ப அவரிடம் இருக்கிற சொத்துக்காக... ஒருத்தியைத் தேடிப் பிடிக்கிறதுதான் சிரமம்... நீங்கள் சமூகப் பணியில் ஈடுபட்டிருப்பதால் இது முடியும் என்ற நம்பிக்கையுடன் உங்களை நாடி வந்தனான்..."

"அது சரி தம்பி, எங்கடை சமூகத்திலை இப்படியான முயற்சிகள் நடக்கின்றதா...... கேட்பவன் சிரிப்பான்......... இதெல்லாம் மேல்நாட்டிலை நடக்கிற, அதிசயங்கள்... எங்கடை பண்பாட்டுக்கு அப்பால் பட்டவை...... அறுபதுக்கும் எழுபதுக்கும் அங்கேதான் கலியாணம் நடக்கிறது."

"அங்கே இளம்பெண்களும் வயோதிபரைக் கலியாணம் செய்து கொள்ளுகிறார்கள்...... பென்சன் 'பொருள், பணத்துக்கா...... அதை ஏன் நாங்கள் பின்பற்றக் கூடாது? பண்பாடு, பாரம்பரியம் என்று சொல்லிக்கொண்டு வாழ்க்கையைப் பாழடிக்கிறதுதான் நாங்கள் கண்ட நாகரிகம்... அரசாங்கம் தரும் பென்சனை அவருக்குப் பிறகு யார் என்றாலும் ஒருத்தி அனுபவித்து வாழட்டுமே...... அதுவரை அந்த மனுசனுக்குத் துணையாக இருக்கட்டுமே இதில் என்ன தவறு......?"

"நீர் சொல்லுகிறதை கொள்கையளவில் நான் ஏற்றுக் கொள்கிறன்...... ஆனால் நீர் நினைக்கிற வரைக்கு எங்கள் சமூகம் இன்னும் மாறவில்லைத் தம்பி..."

"அதிகமாகக் கதைத்து ஐயாவின் மனதைப் புண்படுத்திப் போட்டனோ.....? அப்ப இந்த அலுவல் உங்களாலை முடியாது என்று சொல்லுகிறியள்......?

"ஓம் தம்பி ... நீர் அவரிடத்திலை சொல்ல வேண்டாம். கவனிக்கிறாரென்று மட்டும் சொல்லும்...... நானும் யோசித்து......"

"நீங்கள் கவலைப்படத் தேவையில்லை, அவருடைய பள்ளிக்கூடவாழ்க்கையிலை பல பேரின் அறிமுகம் அவருக்கு இருக்கும்...... உங்கள் நிலையும் எனக்குப் புரிகிறது...... உலகம் புதுமைகளைக் கண்டு வருகிறது...... நாமும் சில அவசிய தேவைகளில் ஆதல் மாற்றத்தைச் செய்ய முயலவில்லையென்றால், முன்னேறும் உலகத்தைப் பார்த்துப் பின்னால் நின்று பெருமூச்சு விடவேண்டிவரும்..."

"நீர் என்னதான் மாற்றத்தைப் பற்றிக் கதைத்தாலும் எங்களுக்கென்று ஒரு பண்பாடு, ஒரு சம்பிரதாயம், ஒரு நாகரிகம் இருக்கிறது... அதிலிருந்து விலகிச் செல்லும்தத்துவங்கள்,எங்கள் வரலாற்றைச் மாசுபடுத்தும்......"

"வறண்ட வாழ்வை வசந்தமாக்கி வாழும் மனோபலம் எல்லோருக்குமே ஏற்பட்டுவிடா."

நல்லதம்பி உபாத்தியாயருக்கு ஒரு துணை தேவை என்பதற்கான காரணங்களைக் கருத்திற் கொண்ட பிரமுகர் செல்லம்மா என்ற பெண்ணை அவருக்குத் துணைவியாக்க ஒழுங்குகள் செய்தார்.

முப்பத்திரண்டு வயதில் மணம் முடித்து முப்பத்து ஐந்து வயதில் கணவனை இழந்துவிட்ட செல்லம்மா நாற்பத்திரண்டு வயதில்நல்லதம்பி உபாத்தியாயருக்கு மனைவியாகும் பாக்கியம் பெற்றாள்.

மற்றவர் விருப்பு வெறுப்புக்களைச் சார்ந்து வாழ்பவரல்ல நல்லதம்பி, செல்லம்மாவை இரண்டாவது துணைவியாக ஏற்று மிக மகிழ்வுடன் இல்லறத்தை நல்லறமாக்கி வாழத் தலைப்பட்டார்.

முன்னைய தாம்பத்திய உறவினால் செல்லம்மாவிற்குக் குழந்தை இல்லை.

இப்பொழுது நல்லதம்பி தம்பதியருக்கு இரண்டு வயது ஆண் குழந்தை ஒன்று இருக்கிறது.

(யாவும் கற்பனை)

## எமது சிறுகதை

---

## பிரிவு

கோகிலம் பாடுது குளிர் காலையிலே - அந்தக்
குரலுக்கு ஏன்சோகம்; துணை இல்லையோ?
ஏகலும் துளிக்குது பனிநீர்த்துளி - அந்த
மேகத்துக் கேன்கண்ணீர்; துணை இல்லையோ?

மேகத்தில் விழி நீரைத் துடைக்கின்றதே - அந்த
விரிகதிர் பகலோனின் மனையாள் எங்கே?
மோகத்தில் முகம்சோர்ந்த இளம்தென்றலும் - மிக
மெதுவாக வேவீசும், துயர் என்னவோ?

மல்லிகை மலர்வீழ்ந்து புரள்கின்றதேன்? - அந்த
மங்கையின் துணைவேறோர் இடம் போனதோ?
இல்லையென் றால்அங்கு இவையாவுமே - எந்தன்
பிரிவென்ற துயர்கண்டே அழுகின்றதோ?

கோப்பாய் எஸ். சிவம்

---

## பச்சோந்தி நிறம் வெள்ளை

உதங்கா

ஓர் உருவகம்

இரு நண்பர்கள் அநேக நாட்களுக்குப் பின்னர் சந்தித்தனர். பழைய கதைகளைப் பேசினர். மனைவி மக்களைப் பற்றி விசாரித்தனர். அரசியல் முதல் அரிசிவிலை வரை உரையாடினர். சமயம், தத்துவம், இவையெல்லாம் அவர்களிடம் வந்து சென்றன. இறுதியில் உயிரியலுக்கு வந்தனர்.

உலகில் உள்ள உயிரினங்களையெல்லாம் படைத்த இறைவன் புகழ் பாடினர். அவற்றின் விநோதங்களைப் புகழ்ந்தனர். ஒருவர் சொன்னார் பாரப்பா இந்தப் பச்சோந்தி இருக்கிறதே இது இறைவனின் படைப்பில் ஒரு விநோதம், ஒரு தனி ரகம் மீனின் முகம் பாம்பின் நாக்கு,அதன் பாதம் மூன்று கிளைகள் கொண்ட கழுகினுடையது போல அதன் வால் எவ்வளவு நீளம்! வாள் போன்ற முதுகு. அது எத்தனை பிராணிகளின் கலப்பு. நிறத்திற்கூட கிளியின் நிறம் அதன் உணவு என்ன தெரியுமா? காற்றைத்தான் உண்கிறது.

உடனே மற்றவர் வாயைப் பிளந்து கேட்டுக் கொண்டிருந்தவர், "நீர்சொல்வதெல்லாம் சரிதான் ஆனால் நிறம் மட்டும் பச்சையில்லை. அது மரப்பட்டையின் நிறம் அதாவது மண்ணிறம். நான் இன்று காலையிற் கூடப்பார்த்தேன். எங்கள் வேப்பமரத்தில் இருந்தது என்றார்.

"சும்மா போங்கள். அதன் நிறம் கிளிப்பச்சை? எனக்கொன்றும் கண்பிசகில்லை. உமக்கென்ன பச்சைக்கும் மண்ணிறத்துக்கும் வித்தியாசம் தெரியவில்லையா?

சந்தோஷமான சந்திப்பு, சவாலாக மாறிவிட்டது! இருவருக்கும் பச்சோந்தியின் நிறத்தில் ஏற்பட்ட அபிப்பிராய பேதம் அடிபிடியாகமாறிவிடும் போல் இருந்தது.

அப்போது அவ்வூர் ஆசிரியர் ஒருவர் அவ்வழியால்வந்து கொண்டிருந்தார். இருவரும் தத்தமது சந்தேகத்தைப் போக்கிக் கொள்ள அவரை நடுவராக்கினர்

"மாஸ்டர்,எங்கள்இருவருக்கிடையில் ஒருபிரச்சனை, அதனை நீங்கள்தான் தீர்க்க வேண்டும்" என்றனர், ஒரே நேரத்தில் இருவரும்.

யாரையாவது நடுவராக்கினால் சொல்லவா வேண்டும். தான் ஒரு நீதிபதி என்ற நினைப்பு உந்தியது ஆசிரியருக்கு. சரி, பிரச்சனையை சொல்லுங்கள் என்றார். ஒரு நீதிபதியின் தோரணை அவர் குரலில் ஒலித்தது.

"மாஸ்டர், இந்த பச்சோந்தி இருக்கிறதே அதன் நிறம் பச்சைதானே? என்றார் பச்சைக்காரர்.

,,இவருக்குக் கொஞ்சம் கண் பழுது பாருங்கோ மாஸ்டர், அது மண்ணிறமல்லவோ? என்றார் மண்ணிறக்காரர்

மாஸ்டருக்கோ தான் இவர்களை விடப் பெரிய அறிவாளி என்ற நினைப்பு. "இருவரும் சொல்வது பிழை அது பாருங்கோ கறுப்புநிறம். சந்தேகம் இருந்தால் உடனே தீர்த்துக் கொள்ளலாம். இரவு என் மகன் ஒன்றைப் பிடித்து இந்தப் பெட்டிக்குள் வைத்திருக்கிறான் அவனுக்கு விலங்கியல் பாடத்துக்குத் தேவையாம்" என்றார்.

உடனே பச்சைக்காரர் "அதுபச்சை நிறமில்லா விட்டால் நான் உங்கள் இருவருக்கும் அடிமை. மாஸ்டர், பெட்டியைத் திறவுங்கோ"

(12ம் பக்கம் பார்க்க)

---

## நீதி

காதைக் குடைந்து
கடுமையாய் ராமுழுதும்
ஊதி ..ஊதி...
உறக்கமே இல்லை

நீதிக்காய்த்தானோ
நீ இங்கு அலைகின்றாய்...

காலையிலே எந்தன்
கைக்குள் மடிந்தது உன்
காதல் இணையோ...
கடைசித் தங்கையோ...

ஓரிருநாள் கூட
ஒழுங்காக இல்லாத
இருப்பினிடையே நான்
யமனாக வந்தேனே...

உனக்கும் கூட
இது எந்தக் கணமோ!

ஒருநாளில் முடிகின்ற
உங்களது சோகம்
பெரும்படிப்புக்காரனுக்கு
தெரியவந்த தின்றுதான்

ஒருநூறு ஆண்டு
இருக்கின்ற திமிரெனக்கு

ஒருநாளும் சின்னனிலே
என்னால் நீர் அழிந்ததில்லை...
பாவம் என்று சொல்லிப்
பறந்தோட விட்டிருப்பேன்...

இடையிலே தானிந்த
இழிவான கொலைக்குணங்கள்
விடைபெற முன்னம்
விருப்போடு மன்னிப்பாயா...

முந்நூறு கொடுத்தென்றாலும்
'மொஸ்கிற்றோ நெற்றை' வாங்கி
என்னை நான் காத்துக் கொள்வேன்
நீயும் உன்பாட்டில் வாழ்வாய்

உன்னது பசியை நானும்
உணராமலில்லை, ஆனால்
என்னைநீ உறிஞ்சல் பாவம்!
ஏதேனும் புதிதாய்த் தின்பாய்...

என்.சண்முகலிங்கம்

# பாஸ்போர்ட்

நேரில் பார்த்து எழுதியவர்: இ. கந்தசாமி

'பாஸ்போர்ட்', இன்று அத்தியாவசிய தேவைகளில் ஒன்ருகிவிட்டது.

இந்நாட்டுமக்களில் குறிப்பாக தமிழ் மக்களுள் 'பாஸ்போர்ட்' எடுப்பதுபற்றிச் சிந்திக்காதவர்கள் எவருமே கிடையாது என்று துணிந்து கூறலாம்.

பாஸ்போர்ட் வைத்திருப்பது மேலதிக தராதரம் என்று கூட பலர் எண்ணுகிருர்கள்.

ஆனுல் பகீரதப் பிரயத்தனம் எடுத்தால் மட்டுமே அந்த பாஸ்போர்ட் அநேகரின் கைகளில் கிடைக்கிறது. ஆயினும் சில பிரகிருதிகளுக்கு அதுசிம்பிள் விஷயம்.

கொழும்பு குடிவரவு குடியகல்வு திணைக்களத்திற்கு 'பாஸ்போர்ட்'விஷயமாகநாள் தோறும் படைஎடுத்து வரும் மக்கள் ஏராளம். மக்கள் கூட்டம் வளைந்து வளைந்து செல்லும் நீண்ட வரிசைகளில் மணிக்கணக்காகக் காத்து நின்று 'பாஸ்போர்ட்' வேலைகளைப் பார்க்கிருர்கள்.

பாஸ்போர்ட் அலுவலகம் தினமும் திருவிழாக் கோலம் எனப் பெதுவாகக் கூறிவிடலாம்.

'பாஸ்போர்ட்' அலுவல்கள் பற்றி அறியும் பொருட்டு அண்மையில் அந்த அலுவல

## உங்கள் விண்ணப்பங்கள்மீது

## அவர்கள் கவனம் செலுத்திஞர்கள் -

## பாடுபடுகிருர்கள்

கம் சென்று உயர் அதிகாரி ஒருவரைச் சந்தித்தேன்.

அவர் மனம் திறந்து பேசுகிருர்-

''பொது மக்களுக்கு உதவி செய்வதற்காகவே நாம் பணி புரிகிறோம்.

'பாஸ்போர்ட்' விண்ணப்பத்தை அனுப்பி ஒரு மாதம் வரை கிடைக்காவிடின் மேன்முறையீடு செய்யலாம். மேன்முறையீடு கிடைத்து மூன்று வாரங்சளுக்குள் எப்படியாவது 'பாஸ்போர்ட்'டுக்களை நாம் வழங்கி விடுவோம்.

### தபால்மூலம்...

''இப்போது சகலருக்குமே பாஸ்போர்ட்டுகள் தபாலில் அனுப்பி வைக்கப்படுகின்றன ''மோசடி ஊழல் ஆகியவற்றிலிருந்து மககளைக் காப்பாற்றுவதற்காகவே சகல 'பாஸ்போர்ட்டுக்களும் தற்போது தபால் மூலம் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

சுகவீனம், கல்விபோன்ற தேவைகளுக்காக வெளிநாடு செல்பவர்களுக்கு அவர்களது அவசியம், அவசரம் கருதி காலதாமதமின்றிக் கூடிய விரைவில் வழங்கநடவடிக்கை எடுத்துவருகிறோம்.

வெளிநாடுகளில் வேலை பெற்றுச் செல்பவர்களுக்கு உடனடியாக 'பாஸ்போர்ட்' வழங்கமுடியாத நிலை. இவர்கள் வேலைக்கு விண்ணப்பிக்க முன்னரே பாஸ்போர்ட்டுக்காக விண்ணப்பித்திருக்க வேண்டும்.

''அநேகர் கவனயீனமாக இருந்துவிட்டு வெளிநாடுகளில் வேலைகிடைத்ததும் கடைசி நேரத்தில் இங்கு ஓடிவந்து பாஸ்போர்ட் கேட்கிருர்கள். இது அவர்களுடைய தவறு தானே.

''கடந்த ஆண்டு ஜூலை கலவரங்களுக்கு முன்னர் அநேகமாக விண்ணப்பித்த ஒரு வாரத்திலும் கூட பாஸ்போர்ட்டுக்களை எங்களால் வழங்க முடிந்தது.

ஆனுல் இப்போது விண்ணப்பிப்போரின் தொகை அதிகரிக்கப்பட்டது மட்டுமன்றி யாழ்ப்பாணம், கண்டி, காலி ஆகியகச்சேரிகளில் இயங்கி வந்த அலுவலகங்களும் மூடப்பட்டு அந்தவேலைகளையும் இங்கேயே செய்யவேண்டி உள்ளது.

### நாளாந்தம்

### 500 பாஸ்போர்ட்டுகள்

எனினும் நாளாந்தம் 500 பாஸ்போர்ட்டுக்களை விநியோகித்து வருகிருேம். இச்சமயம் அவரது தொலைபேசி மணி ஒலிக்கிறது. இங்கிலாந்திலிருந்து அவசரமாகத் தருவிக்கப்பட்ட பாஸ்போர்ட் புத்தகங்களைச் சுங்கப்பகுதியிலிருந்து வெளியே எடுத்து வருவது தொடர்பான அழைப்பு அது அவர் மகிழ்ச்சியுடன் அந்த தகவலையும் எனக்குத் தருகிருர்-

## உங்கள் பாஸ்போர்ட்

## கிடைத்துவிட்டதா?

''மாற்றங்களோ போலி வேலைகளோ செய்யமுடியாத மிகவும் பாதுகாப்பான ஐந்து லட்சம் பாஸ்போர்ட் புத்தகங்களை நாம் பிரிட்டனிலிருந்து தருவிக்க 'ஓடர்' கொடுத்திருந்தோம். அவற்றில் 20 ஆயிரம் புத்தகங்கள் இப்போது வந்துள்ளன.

இவை உடனடி பற்ருக்குறையைப் போக்குவதற்குப் பெரிதும் உதவும். விமான மார்க்கமாக இப் புத்தகங்கள் இப்போது வந்துள்ளன. ஏனையவை ஏப்ரல் மாதமளவில் கடல் மார்க்கமாக வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது''

''ஜூலை இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக 'பாஸ்போட்'டுக்களை வழங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது

''கடந்த ஆகஸ்ட் முதல் ஜனவரி வரை 24 ஆயிரம் பார்ஸ் போர்ட்டுக்களை கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கினேம்,

''மோசடிக்காரர்கள் அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தத்தவறவில்லை.

''கலவரத்தால் ஒரு சிறு பாதிப்புக் கூட இல்லாத தமிழ் மக்களும் ஏன் சிங்கள மக்களும் கூட அக்காலப் பகுதியில் அந்தப் போர்வையில் வந்தமையினுல் எமக்குப் பெரும் சிரமமாகி விட்டது. என்ருர்.

அங்கு பணி புரியும் ஊழியர்கள், அதிகாரிசளின் மேசைகளிலும் மலைபோல் விண்ணப்பங்கள் குவித்து வைக்கப்பட்டுள்ளன.

ஆங்காங்கே விண்ணப்பதாரிகளின் புகைப்படங்கள் எட்டிப் பார்த்தபடி இருக்கின்றன.

நான்சென்றவேளை சிரேஷ்ட அதிகாரி அங்கு வந்திருந்தார்.

அந்த உயர் அதிகாரியிடம் தன் முன் மலையாகக் குவித்து வைக்கப்பட்டிருக்கும் விண்ணப்பங்களுக்கு உரிய புகலிடம் கேட்டுக் கொண்டிருந்தார் அந்தப்பகுதி அதிகாரி.

''எமது மேசைகளிலும் கதிரைகளிலும் இவ்வாறு விண்ணப்பங்களைக் குவித்து வைத்திருந்தால் நாம் எப்படித்தான் பணி புரிவது?'' என்பது அந்த அதிகாரியின் கேள்வி.

''விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று புன்சிரிப்புடன் கூறிச் செல்கிருர் சிரேஷ்ட அதிகாரி.

யாழ்.கச்சேரியிலிருந்து வரும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்யும் உயர் அதிகாரியை அணுகினேன்.

''யாழ் கச்சேரியிலிருந்து கடந்த அக்டோபரில் அனுப்பப்பட்ட விண்ணப்பங்களே தற்போது பரிசீலனை செய்கிருேம்'' அவர் கூறிய இந்தத் தகவல் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

மாதங்களைக் கணக்கிட்டுப் பார்க்கிறேன்; தொடர்ந்து அவர் கூறிய தகவல்கள் சிறிது ஆறுதலைத்தருகிறது.

ஒவ்வொரு கச்சேரிப் பிரிவிலிருந்தும் நாளாந்தம் 25 விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து பார்ஸ் போட் தயாரிக்கும் பிரிவுக்கு அனுப்பி வைத்தோம் இப்போது இத்தொகை நாளாந்தம் 200 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

''தற்போது அதிக ஊழியர்கள் இங்கு சேர்க்கப்பட்டுள்ளனர்.

''5 லட்சம் பார்ஸ் போட் புத்தகங்கள் இங்கிலாந்திலிருந்து அடுத்த மாதமளவில் வந்து சேரவுள்ளன.

''இதன் மூலம் எதிர்காலத்தில் தற்போதையை விட அதிக பார்ஸ் போட்டுக்களை விநியோகித்து மக்களுக்கு உதவ முடியும் என நம்புகிறேன்,,

அவரது எதிர்பார்ப்பு எனக்கும் ஒரு நம்பிக்கையைத் தந்த போதிலும் அந்த அலுவலகத்தை விட்டு வெளியேறும் போது கொழுத்தும் வெய்யிலிலும் வெளியே காத்திருந்த பெருங் கூட்டத்தைப் பார்த்ததும் அந்த நம்பிக்கையிலும் சிறு சந்தேகமே ஏற்பட்டது.


நீங்கள் வெளிநாடு

செல்கிறீர்களா ?

கொழும்பு சென்று பயணச்சீட்டுக்களைப் பெறுவதில் உள்ள

★ தாமதம் ★ வீண்செலவு

ஆகியவற்றை தவிர்த்து யாழ்நகரிலேயே உங்கள் பயணச்சீட்டுக்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் உடன் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் திரும்பிச் செல்லும் பயணச்சீட்டுக்கள் (Return Tickets) வைத்திருப்போரும் கொழும்பு செல்லாமல், தங்கள் ஆசனங்களை இங்கேயே பதிவு செய்து கொள்ளலாம்

FLY

To many parts of the world at Unbeatable Rates

TFC

த பிஞன்ஸ் கம்பனி லிமிட்டெட்,

249, மின்சார நிலைய வீதி. யாழ்ப்பாணம். போன்: 23680

போன்: 23680—22089


## புதிய புத்தகம்

## கோகிலா மகேந்திரனின்

# முரண்பாடுகளின் அறுவடை

மனிதனை உயர்த்துவது பணமன்று பதவியன்று. குலமன்று. உயரமுமன்று அறிவு ஒன்றுதான் மனிதனை உயர்த்தும் அறிவுடையார் எல்லாம் உடையார் என்கிருர் திருவள்ளுவர். இத்தகைய அறிவு படைத்த கோகிலா மகேந்திரன் அவர்கள் ஈழத்து எழுத்தாளர் உலகில் தனது சிந்தனையாலும், ஆளுமையாலும், விஞ்ஞான நோக்கிஞலும் தனித்துவம் பெற்றுத் திகழ்கிருர். தனது அடி மனதிலுள்ள நிகழ்வுகளையும், அபிலாசைகளையும், நாளாந்த நடைமுறையில் காணும் நிகழ்வுகளையும் சுவையான கதைகளாகச் சமைக்கும் சாமர்த்தியம் இவருக்கே உரியதாகும்.

'முரண் பாடுகளின் அறுவடை' என்ற இவரது இரண்டாவது சிறுகதைத் தொகுதி அண்மையில் வெளிவந்துள்ளது. இத்தொகுப்பிலே பாத்திரங்கள் எல்லாமே தன்னைச் சுற்றியுள்ளவையாக அமைக்கப்பட்டுள்ளன. துணிகரமாகப் பிரச்சினைகளைத் தொட்டுத்தீர்த்து வைக்கும் திறனும், எதையும் துருவி ஆராய்ந்து விஞ்ஞானவிளக்கம் கொடுத்து விளங்க வைப்பதும் கோகிலா மகேந்திரனின் புதிய போக்காகின்றது. இவரது எழுத்தும் சிந்தனைகளும், மொழி நடையும், மெல்லிய இழையோடும் நகைச் சுவைக் கலப்புள்ள வாழ்க்கைப் பார்வைம், தமிழ் இலக்கிய உலகின்யு தனிக்கவனத்தைக் கவர்வதாக அமைகின்றன.

மற்றவர்களின் கண்களில் சாதாரணமாகப் படும் நிகழ்ச்சிகள் யாவும் இவருக்குமூலப் பொருள்கள். இறைவனின் மனம்குளிருமிடத்து அவரின் அருள் பார்வை கிடைக்கும் என்ற சமயதத்துவம் இவரின் 'அன்பிற்கு முன்ஞல்' என்ற கதையில் விளக்கப்படுகின்றது. தனது மனவேதனையை வெளிக்காட்டாது, தாய்தகப்பனின் மனங்குளிர வைக்கும் பண்பு மிகவும் உயர்வாக எடுத்துச் சொல்லப்படுகிறது.

தாய்க்கு முதலிடம் கொடுக்கும் கணவனும் மனைவிக்கு முதலிடம் கொடுக்கும் மகனும் முரண்பட்டவர்களே இவ்வாறு ''தலைமுறைகள் முரண்படும் போது'' வாழ்க்கையில் விரக்தியும் துயரமும் இயல்பானவை என்பதைஎடுத்துக் காட்டுகின்ருர் கோகிலா.

இந்த விஞ்ஞான யுகத்தில் பழைய கால நம்பிக்கைகள் எம்மைப் படு குழியில் தள்ளிவிடும் என்ற கருத்து 'நம்பிக்கைகள்' மூலம் விளக்கப்படுகிறது.

தாழ்த்தப்பட்ட சமூகத்தில் இக்கதையில் அங்கத்தில் குறையிருந்தாலும் அன்பு குறையாது பாதுகாக்கப் படுகிறது.


பணக்காரர்கள் தமது அந்தஸ்தை நினைத்து, ஏழைகளின் கேள்விகளுக்குக் கூடச் செவி சாய்க்காத தன்மையைத் துன்பங்கள் சாவதில்லை எடுத்துக் காட்டுகிறது.

ஆசிரியரின்விஞ்ஞான விளக்கங்களும் மாணவனின் பதிலும் சிரிக்கத்தான் செய்கின்றன, அடுத்த கதையில் ஆனுல் மறுபுறம் தகப்பனை இழந்த மகன் வயிற்றுப் பசியால் வாடி இறக்கும் தன்மை சவலைக் கடலில் மூழ்க வைக்கிறது.

பிறந்தாலும் வெள்ளை உள்ளங்களின் பிணைப்பு நிலையானது என்ற கருத்து மிகவும் உணர்ச்சியுடன் வெளியிடப்படுகின்றது 'நிமிரும் ஊனங்கள்' கதையில்.

கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்ற பரந்த நோக்கும் கணவனின் கருத்தோடு இணைந்த வாழ்க்கையும் 'ஓர் உள்ளம் பேசுகிறதன்' ஊற்ருக அமைகின்றன. ஆயினும் இது தற்கால யாழ்ப்பாணத்துடன் ஒன்ருது நிற்பது போல ஒரு பிரமை.

(12ம் பக்கம் பார்க்க)




# தொடர் நவீனம்

## 7

பொன்னம்மா மில் பெரும் சேமக்கல ஓசை பன்னிரண்டுதரம் அடித்து, பின்பு ஒன்றடித்துச் சிறிது நேரத்தின் பின்தான் உள்ளே சென்றவர்கள் வெளியே வந்தார்கள்.

பண்டாரி முளிசிக்கொண்டு பயபக்தியுடன் எழுந்து நின்ருன்.

அவனைப்பற்றிய எந்தவித அக்கறையும் இன்றிப்பொலிஸ் அதிகாரியும் மற்றவர்களும் மரப்படலை வரை சென்று குதிரைவண்டியில் ஏறிக் கொண்டனர்.

இராசரத்தினத்தார் அவர்களை முற்றம் கழியும்வரை வந்து வழிஅனுப்பிவிட்டுப் பண்டாரியிடம் வந்துவிட்டார்.

''பண்டாரி, பொழுதுபட்டாப் போலையெல்லையடா ஆள் அனுப்பினஞன், இப்பதானையடா வாறது?''

இராசர் கேட்டார்.

''நான் எப்பன் வெளியிலை போட்டு வந்தனுன்; வந்தோடனை ஆச்சி சொன்னவ. ஐயா ஆளை அனுப்பினவரெண்டு! நான் கையோடை வந்திட்டன்; பிள்ளையைக் கேட்டுப்பாருங்கோ!''

''சரி, சரி. இப்ப ஏன் நீ வில்லங்கப்படுகிறுய்,! உதிலை ஓட்டுமடத்தடிக்கு ஒருக்காப் போகவேண்டியிருந்தது அதுதான் றிக்சோவுக்கு ஆளை அனுப்பினஞன். கொஞ்ச நேரம் நிண்டுபார்த்தன் உன்னைக் காணேல்லை. அதுக்கிடையிலை எங்கடை முக்கந்தப் பொடியள் வந்து குதிரை வண்டில்லை கூட்டிக்கொண்டுபோட்டாங்கள்!'' என்று அத்துடன் அப்பேச்சை நிற்பாட்டி விட்டு ''அப்ப பண்டாரி நீ போட்டு நாளைக்குவாவன்'' என்ருர்.

பண்டாரிக்கு ஒன்றும் விளங்கவில்லை சிவக்கொழுந்தியிடம் பண்டாரியை நிற்பாட்டச் சொல்லிச் சொன்னவர், இப்போது திடீரென்று அவனைப்போகும்படி சொல்லிருர்.

ஒன்றும் பேசாமல் அவன் மரப்படலைவரை வந்து விட்டபோது ''பண்டாரி நிண்டுகொள்'' என்று இராசர் அழைக்கவே அவன் நின்றுவிட்டான்.

இராசர் அவனுக்குக்கிட்டவாக வந்தார். ''பண்டாரி, இப்ப நீ இஞ்சை நிக்கையுக்கை பொலிசிஞ்சுப் பெற்றரும் முக்கந்தர்ப் பொடியளும் இஞ்சை வந்த தெண்டு ஆருக்கும் சொல்லிப் போடாதை கண்டியோ. பிறகுஇது வெளியிலை தெரிஞ்சுதெண்டா ..'' என்று மேலே சொல்லமுடியாமல் நிறுத்திக் கொண்டார்.

''எனக்கேன் உந்தக்கதையளை? நான் ஏன் வெளியிலை சொல்லப்போறன்!'' என்று சொல்லிக்கொண்டே பண்டாரி படலைக்கு வெளியே வந்துவிட்டான.

பண்டாரிக்குத்தன்னைப் பற்றிய பயம் போய் இப்போது பொலிஸ் இன்ஸ்பெக்டரும் முக்கந்தர் பொடியளும் இராசர் வீட்டுக்கு வந்து போனதற்கான காரணம் பற்றிய சிந்தனைதான் இடம் பெற்றது.

கறிக்கடைக்கு முன்னல் யாரோ வெட்டப்பட்டுக் கிடப்பதாக அறிந்தது, பொலிசும் முக்கந்தர்மாரும் இராசர் வீட்டுக்கு வந்தது, இராசர் தன்னை அவசியமில்லாமல் எச்சரித்தது எல்லாவற்றுக்கும் ஏதோ ஒரு வகையில் தொடர்பிருப்பதாக அவன் சின்ன மனசுக்குள் ஒரு எண்ணம் ஓடி நெளிந்தது

அவன் கால்கள், வந்தபாதைக்கு அவனை இட்டுச் செல்வதற்குப்பதில் நேர் பாதைக்கே இட்டு வந்துவிட்டன.

அவன் கறிக்கடைவரையில் வந்து விட்டான்.

ஜனம் கூட்டமாக நின்றது.

கூட்டத்தை ஊடறுத்துக் கொண்டு அவன் உள்ளே பார்த்தான்.

பிணம் ஒன்று அலங்கோலமாகக் கிடந்தது.

கழுத்து, கைமூட்டு, இடுப்பு ஆகிய இடங்களின் வெட்டுக் காயங்கள் 'வாயைப்பிழந்து' நின்றன.

காயங்களிலிருந்து வழிந்தோடிய இரத்தம் கல் றேட்டில் பரவி ஆங்காங்கே உறைந்து போய்க்கிடந்தது. கழுத்திலிருந்து வழிந்தோடிய இரத்தம் அவனின் கலைந்த குடுமிக் கூந்தலையும் சேர்த்துக் கொண்டு உறைந்து கிடந்தது.

''எட, ஆள் அஞ்சனந்தாழ்வு மாணிக்கன் போலை கிடக்கு''

இப்படி ஒருகுரல் எழுந்தது.

''அப்பிடித்தான் நினைக்கிறன்; முகங்குப்பறக் கிடக்கிறத்தாலை சரியாச் சொல்லேலாமக்கிடக்கு''- இன்னெரு குரல்.

ஆரெண்டாலுங் கிடக்கட்டுக்கு உங்களுக் கேன்ராப்பா வீண் கதையளை? புங்கை பொலிசுக்காறரும் வந்திட்டாங்கள் எப்பன் தள்ளி நில்லுங்கோ''

இப்படி வேருெரு குரல்.

பொலிசார் மூவர் வந்து சேர்ந்து விட்டனர். அவர்கள் அரைக் காற்சட்டை அணிந்திருந்தனர்.

ஒவ்வொருத்தர் கைகளிலும் தோல் இணைந்த குமிழ் தடி. வந்தவர்கள் சற்றுச் சிவப்பு நிறத்தவர்களாக இருந்தனர்.

''எட மூண்டு பேரும் யாகுவரெடா பொல்லாதவங்களெடா: எட்ட நில்லுங்கோடா,,

இது நான்காவது ஒருவனின் நகல் குரல்.

பொலிசார்கூட்டத்தைவிலக்கிக் கொண்டு முன்னே வந்துவிட்டனர்.

கூட்டம் நகர்ந்து பரவியது.

பண்டாரி பிணமாகக் குப்புறக் கிடப்பவனை இனங்காணத்தான் முற்பட்டான். ஆனல் அவனுலும் இது முடியவில்லை.

பண்டாரிக்கு விஷயம் எல்லாம் இலேசாக விளங்குவது போலிருந்தது.

அஞ்சனந்தாழ்வு மாணிக்கனுக்கும் அலுப்பாந்தியில்வேலை செய்யும் யாரோ ஒரு இராசர் முக்கந்தருக்கும் சோற்றுக்கடை நாகலிங்கத்தாரின் கடையில் ஏதோ கொழுவல் நடந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிருன்.

மாணிக்கனும் ஒரு வேண்டாத் தலையன் என்பதும் அவனுக்குத் தெரியும். இவைகளினுல் எல்லாம் செத்துப் போய்க் கிடப்பவன் மாணிக்கன்தான் என்ற முடிவுக்குத்தான் அவனை வரச் செய்தது

அப்போதுதான் பஸ் நிலைய வெளிக்கூடாகஆண்கள் பெண்களாகப் பலர் கூக்குரலிட்டுக் கொண்டு வந்து சேர்ந்தனர்.

எல்லோரையும் பண்டாரி அடையாளம் கண்டுவிட்டான்.

வந்தவர்கள் எல்லோரும் மாணிக்கனின் அக்கா தங்கை, அண்ணன், மாமன், மச்சான் ஆகிய உறவினர்கள்தான்.

பண்டாரிக்கு அவர்கள் தூரத்து உறவினர்களாகவும் இருந்தார்கள்

குளறிக் கூத்தாடிக் கொண்டு சடலத்தை அடைந்து விட முற்பட்டவர்களைப் பொலிசார் பயமுறுத்தித் தடுத்து நிறுத்திவிட்டனர்.

பண்டாரிக்கு ஒன்றுமே செய்யமுடியவில்லை.

இந்தக் கொலைக்கும் தனது இராசருக்கும் தொடர்பு இருந்திருக்கிறது என்றே, அல்லது கொலை நடந்த பின் கொலையாளிகளுக்குஇராசர் பொலிஸ் மூலம் ஒத்தாசை செய்திருக்கிருர் என்றே இரண்டத்தொகு உண்மை அவனுக்குத்தான் தெரிந்திருந்தது.

இதை அவன் யாருக்குமே வாய் விட்டுச் சொல்லி விட முடியாது அந்த இடத்தில் நின்ருல் அதனைச் சொல்லி விட வேண்டி வந்து விடும் என்பதற்காக எல்லாவற்றையும் மிண்டி விழுங்கிக் கொண்டே அவன் வீட்டுக்கு வந்து விட்டான்.

பண்டாரியின தாய்க்கு இது ஒன்றுமே தெரியாது அவள் மெய்யுறக்கத்தில் கிடந்தாள்.

அடுக்களைக் கொட்டிலுக்குள் அவனுக்கான இரவுச் சாப்பாட்டை அவள் வைத்துக் கரப்பினுல் மூடியிருப்பாள் என்பது அவனுக்குத் தெரியும். ஆனுலும் அவன் அதைப் பற்றிய கவலை எதுவுமின்றி சாக்கை உதறிப் போட்டுக் கொண்டு படுத்து விட்டான்.

வயிற்றிலும் பசி எடுத்ததாக இல்லை!

மேற்குப் பக்கத்திலிருந்து சற்று நாதமுள்ள- கனம் குறைந்த மூன்று மணி ஓசைகள் கேட்டன.

அடுத்துச் சற்றுச் சமீபமாக அதே மூன்று ஓசைகள்.

அதை அடுத்துக் கிழக்குப் பக்கத்திலிருந்து அதே மணி ஓசைகள்!

நாளாந்த வழக்கம் அப்படித்தான்.

ஆரிய குளத்தடி முதலாம் றெயில் கேற்றிலிருந்து ஒருவன் நேரத்திற்கு கட்டித் தொங்க விடப்பட்ட தண்டவாளத் துண்டில் மணி அடிக்க அடுத்து ஸ்ரேசனிலிருந்து மற்ற மணி அடித்து, கடைசியாகக் கச்சேரியடிப் பாதுகாப்பில் மற்றவன் அடித்து மணி ஓசைகள் ஓய்ந்து போய் விடும்.

இப்போது மணி சரியாக மூன்று!

விடிவதற்கு இன்னும் மூன்று மணி நேரம்தான் மிகுதி இருந்தது.

இந்தச் சிறு இடைவேளைக்கு இடையில் கலைந்து கலைந்து வந்த சிறு தூக்கக்கனவுகளில் அவன்கண்டதெல்லாம் இராசரின் மாறுபட்ட உருவங்களைத்தான்? ஒரு சந்தர்ப்பத்தில் அவர் சவுக்கால் ,,சொல்லுவியா! சொல்லுவியா?'' என்று கேட்டுக் கேட்டுத் தன்னை அடிப்பது போலவும் ......

ஒருக்கால் தனதுறிக்சோவை மடக்கி முறித்து தீமூட்டி எரிப்பது போலவும்.........

நன்ருகவிடிந்து அவன் வீட்டுக்கு வெளியே வந்தபோது பலர் அங்குமிங்குமாகக் கூடிக் கூடிப் பேசினர்.

எதையும் அறியாதவன் போலப்பேச்சுகளை அவன் அவதானித்தான்.

அவையாவும் அஞ்சனந் தாழ்வு மாணிக்கனையும், சோமர்முக்கந்தர் மார்களை யும், சோற்றுக்கடை நாகலிங்கத்தாரையுமேசுற்றி சுற்றி வந்தன.

தன்னைப் பற்றியும் ஏதாவது வருகிறதா என்பது தான் அவன் அவதானிப்பெல்லாம்!

(தொடரும்)

---

# துாது செல்லாயோ?

கத்துங் குயிலேநீ கணநேரம் என்னேடு
சித்தங் கலந்தேதான் சிலகதைகள் கேளாயோ
பித்தாகிக் காதல்நோய் பிடித்தே அலைவதினை
அத்தானி டம்சென்று அறிவிப்பாய் ஜேர்மனியில்

தென்றலென வந்தெனையே தீண்டும் நற்காற்றே
குன்றுதனில் ஆடிவரும் குமரன் உருப்போல
நின்றவென தன்பருக்கு நீண்ட தொருசெய்தி
சென்றுபகர் இன்றேல் செத்து மடிவேனே

துாதுசெல் நிலவே துன்பப் பட்டுலகில்
சூதறி யாதவள் சுக்குநூ ருகவே
பேதலித் திருக்கும் பேடைநான் எனவே
காதலித் தவரிடம் கண்டுதான் சொல்லு

மெத்தையில் தூங்கவே மேனியில் முள்ளூ
குத்துதல் கண்டேன் கூடிக் கலந்தன்று
வித்திட்டுச் சென்ருர்; மென்குயிலே - இன்று
சத்தாக வாரும் சங்கதியைச் சொல்லாயோ?

- எஸ். சி. எஸ். சிதம்பரநாதன்

---

# புளுகன்

பாணுக்கு வழியில்லை
பதைபதைத்தார்
பரமசிவத்தார்.
என்ருலும்
காலைக்கடன்களில்
இதுவுமொன்று -
விநாயகர் படத்தின்முன்
விழிமூடி
விரல் சேர்த்து
மனமுருகிப் பாடுகிருர்:
''பாலும் தெளிதேனும்
பாகும்பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு
நான் தருவேன்...''

---

# விடிவு எப்போ?

கிட்டியடி
கிளித்தட்டுப்போய்
'கிறிக்கற்மச்' வந்தது
சோட்டி கிமோனு போய்
மக்சியும் வந்தது
கைவண்டி கால்வண்டி போய்
'கொண்டா யமகா' வந்தது
எண்பத்துமூன்றும் போய்
எண்பத்துநான்கும் வந்தது
விஷமாக ஏறும்
விலைவாசி போய்
விடிவுகாலம் எப்போவரும்?

- குமார் ஞனபால்

---

# தீர்ப்பு!

'பாமரன்' தவறுகள்
தண்டிக்கப்படுகின்றன!
'படித்தவன்' தவறுகள்
மன்னிக்கப்படுகின்றன!
அரசனின் தவறுகள்
தர்மங்களாகின்றன! ..

- சுதாகர்

---

சிறந்த இலக்கியம் ஒன்றைத் திரும்பப் படித்தீர்களானுல் அதில் முதலில் படித்ததைவிடப் புதியதாய் ஒன்றும் பார்க்க மாட்டீர்கள் ஆனுல் உங்களினுள் முன்பு பார்க்காததை இப்போது பார்ப்பீர்கள்.

- கிளிஃப்டன் பாடிமன்

---

அலிபாபாவினுடைய தைத் தவிர எத்தனையோ பொக்கிசங்கள் வார்த்தை என்ற திறவுகோலால் திறக்கப்படுகின்றன.

- ஹென்றி வான்டைக்

---

# இடி அமின்

நான் என் நாட்டை இழந்து விடவில்லை. என் எதிரிகளுக்குக் கடனுகக் கொடுத்திருக்கின்றேன். இப்பொழுது கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கின்றேன். மறுபடியும்உகண்டாவின் ஆட்சியைக் கைப்பற்றுவேன்

இடிஅமின் பிரெஞ்சுப் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டி.

# சீமையிலே ஸ்ரீ கணபதி

இலண்டனில் விம்பிள்டன் பகுதியில் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானைத் தரிசிக்கும்பாக்கியம் கிட்டியது

ஒரு சிறிய மண்டபத்தில் ஆலயம் அமைந்திருக்கிறது. வெளியே- சைபர் பாகை சென்டிகிரேடிற்கு மேலும் கீழுமாக வெப்பநிலை ஊசலாடிக் கொண்டிருந்தது. உதிரத்தை உறையவைக்கும் பனிக்குளிர். வெண்கம்பளம் விரித்தாற் போல் பனி மூடிய நிலப் பரப்பு.

உள்ளே- மூலஸ்தானத்தில் ஸ்ரீ கணபதி மேலும், நடராஜர் சிவகாமி, அனுமார் வெங்கடேஸ்வரர், சுவாமி ஐயப்பன், ராதா- கிருஸ்ணன், துர்க்காதேவி, முருகப்பெருமான், நவக்கிரகங்கள் ஆகியோரும் எழுந்தருளியிருக்கின்றனர்.

மூலஸ்தானத்தின் சிறிய கோபுரமும் கொடிமரமும் மண்டபத்தின் கூரைக்கு அடியிலேயே அமைந்திருக்கின்றன. எனவே மண்டபத்தில் வெளியே இருந்து பார்க்கும் எவருக்கும், அது ஒரு கோவில் என்று தோற்ருது.

இலண்டன் நகர அமைப்பு வீதிகளின் படி கூரைக்கு வெளியே ஓங்கிநிற்கும் கோபுரங்களை எல்லாம் நிர்மாணிக்க முடியாது.

ஆலயத்தின் உட்பகுதி எங்கும் நிலத்தில் மெத்தை போல் மெதுமையான கம்பளம் விரிக்கப்பட்டிருக்கிறது. எனவே நிலத்தை கூட்டிப் பெருக்கிக் கழுவுவதற்கு இடமில்லை வாக்யூம் கிளீனர் கொண்டு அழுக்குத் தூசிகளை உறிஞ்சித் தள்ளவேண்டியது தான்.

காலநிலைக்கேற்ற கோலங்கள்.

காலநிலைக்கேற்ற கோலங்கள்.

பாதகமில்லை.

அடியார்கள் தம் மனத்தை ஒரு நிலைப்படுத்தி, தெய்வ சிந்தனையுடன் சங்கமிக்கவைப்பதால் ஆலயத்தின் பணிமுழு நிறைவு பெறுகிறது.

## முருகன் கோவில் கும்பாபிஷேகம்

இலண்டனில் ஹைகேட் குன்றில் நிறுவப்பட்டு வரும் முருகன் கோவில் நிர்மாண வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. தமிழ் நாட்டைச் சேர்ந்த ஏ. ஆர். மோகன்ராமின் தலைமையில் ஏழு சிற்பிகள் இரவுபகலாக இறுதிக்கட்ட வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். மூலஸ்தான விமான வேலைகள் ஜனவரியில் நிறைவுஎய்தின. விசேஷ அபிஷேக ஆராதனைகளின்பின், மூலஸ்தானயந்திரம்தமிழ்நாட்டிலிருந்து ஸ்ரீ மோகன்ராமால் கொண்டுவரப்பட்டு மூலஸ்தானத்தில் நிறுவப்பட்டது.

இந்தக் கோவிலை நிறுவி வரும் ''பிரித்தானிய இந்து ஆலய நிதியம்'' வங்கிக் கடனாக 27,000 பவுண்ட்ஸ் (இலங்கை ரூபா 9,72,000) பெற்றுள்ளது என்றும், மேலும் 20,000 பவுண்ட்ஸ் (இலங்கையில் ரூபா 7,20,000) தேவைப்படுவதாகவும், இந்த நிதியத்தின் சார்பில் அதன் தலைவர் ஸ்ரீசபாபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். (இலங்கையில் இந்துக்கோவில் கட்ட எந்த வங்கியாவது கடன் தருமா என்பது ஆராய்ச்சிக்குரிய விஷயம்!) இந்தநிதி இலண்டனிலுள்ள இந்து மக்களிடமிருந்து திரட்டப்பட்டு வருகிறது

கோவிலின் மகாகும்பாபிஷேகம் இவ்வருடம் ஜூன் மாதம் நடைபெறவிருப்பதாக தர்மகர்த்தாக்கள் சபைத் தலைவர் ஸ்ரீ எஸ். சபாபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். ஏ. வைரவமூர்த்தி (செயலாளர்), ஆர். குணசிங்கம் (பொருளாளர்) சி. விநாயகமூர்த்தி, டாக்டர் வி. பி. நாராயணராவ், ஏ. ரி. ஸ். இரத்தினசிங்கம், என், வாமதேவன் ஆகியோர் தர்மகர்த்தாக்கள் சபையின் இதர உறுப்பினர்களாக உழைத்து வருகின்றனர்.




லண்டன் மடல் : "உதயதாரகை"

கொடுங்குளிரை முறியடிப்பதற்கு சூடேற்றும் கருவிகள் வெப்பத்தை மண்டபத்தினுள்ளே அள்ளிவீசிக் கொண்டிருக்கின்றன.

ஒலிப்பதிவு நாடாவிலிருந்து இனிய நாதஸ்வர இசை மிதந்து வந்துகொண்டிருக்கிறது.

உள்ளே- மூலஸ்தானத்தில், மணி- தீபாராதனை சகிதம் காலைப்பூஜை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அர்ச்சகர் முழுக் கைக்கம்பளிச் சட்டை (''ஸ்வெட்டர்'' என்று இலங்கையில் சொல்லுவோம்- ''ஜம்பர்'' என்று இங்கே சொல்லுவார்கள்-) அணிந்து காலைப் பூஜைக் கடன்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறுர்.

அடியார்கள்- கம்பளிச் சட்டையோடு கோட்- சூட், பாதங்களுக்கு ''சொக்ஸ்'' சகிதம் மெய்மறந்து விநாயகப் பெருமானை வணங்கி நிற்கிறுர்கள்.

அவர்கள் உள்ளே வரும் போது, மேலாடைகளை எல்லாம் களைந்து, கை- கால் கழுவி வரவில்லை- வரவும் முடியாது- வரும்படி எவரும் வற்புறுத்தவுமில்லை. பாதணிகளை மட்டும் வெளியே களைந்து வைத்துவிட்டு உள்ளே வந்திருக்கிறுர்கள்.

சீமைக்கேற்ற சம்பிரதாயங்கள்.

## இலண்டன் மாநகரில் "சங்கே முழங்கு"!

இலங்கைத் தமிழர் பிரச்னையை அடிப்படையாக வைத்து ''சங்கேமுழங்கு'' என்ற பெயரில் கலாசாரக் கதம்ப நிகழ்ச்சி ஒன்று அண்மையில் இலண்டனில் நடைபெற்றது. ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம் இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்திருந்தது.

மெல்லிசைப் பாடல்கள்,

(10ம் பக்கம் பார்க்க)

மஹாகவி தண்டி என்பவர் வடமொழிக் கதாசிரியர்களுள் மிகவும் புகழ்பெற்றவர். இவர் எழுதிய தசகுமாரசரிதம் என்னும் வடமொழி நூல் உலகப்பிரசித்தி பெற்றது. அதிலே உள்ள கிளைக்கதைகளுள் ஒன்று காமமஞ்சரி என்னும் கணிகை மாதின் கதையாகும். இக்கதை மிகவும் புதுமையானது. இக்கதையின் ஓர் அம்சத்தையடிப்படையாகக் கொண்டு இச்சிறு கவிதை நாடகம் படைக்கப்பட்டுள்ளது. மனித பலமும் பலவீனமும் சித்திரிக்கப்படும் இந்நாடகமூலம் வஞ்சனையின்வெற்றி மனித சமுதாயத்துக்கு ஓர் வேதனையாகவே அமைகின்றது என்ற உண்மை போதிக்கப்படுகிறது.




### கவிதை நாடகம்
### காட்சி — 1

இடம் - கானகத்தில் மருச்சி முனிவரின் ஆச்சிரமம்
பாத்திரங்கள் - மருச்சி முனிவர்
கணிகை மாது காமமஞ்சரி
காமமஞ்சரியின் தாய்

(விக்கி விக்கியழும் பெண் குரலொன்று கேட்கிறது)

முனிவர் :
யாரம்மா நீ எதற்காக வந்தாய்
முற்றுந் துறந்த முனிவர்கள் வாழும்
ஆச்சிர மத்தை அடைந்தது மேனே?
துன்பச் சுழியிற் சுழன்று வாடித்
தென்பற் றனைபோல் தெரிகின் றனையே
விம்மி விம்மி வேதனை யோடு
அம்மா நீயும் அழுவது மேனே?

காமமஞ்சரி :
மாசில்லாத மருச்சி முனிவ
தாசி யான் ஓர் ஈனப் பிறவி
காம மஞ்சரி யென்பதென் நாமம்
கலைபல கற்ற கணிகை என்னை
விலைமக ளாக்க விழைகிருள் அன்னை
பெண்மையைச் சிதைத்துப் பெருமை யிழந்து
மண்ணில் வாழும் எண்ண மிலேன் யான்
நிலையில்லாத உலக வாழ்க்கை
வலையிற் சிக்கி வருந்திடாது
சிவனை எண்ணித் தினமும் இங்கே
தவம் மேற்கொள்ளத் தமியேன் வந்தேன்
சிறியள் என்னைச் சிஷ்யை யாக
ஏற்றுக் கொள்க இணையடி பணிந்தேன்

முனிவர்:
பெண்ணே உள்ளம் பேதலிக் காதே
கண்மூன் றுடையான் கருணை பொழிவான்

(தூரத்தே பெண்குர லொன்று கேட்கிறது)

தாய்:
மகளே! மகளே!...

முனிவர்:
... மாதே! யாரது?

காம:
என்னை யீன்ற அன்னை போலும்,

(காமமஞ்சரியின் தாய் முனிவரை அடைந்து)

தாய்:
சுவாமி உங்களைத் தொழுகின்றேன் யான்

முனி:
எழுந்திரு தாயே ஏனழு கின்ருய்
அழுவத ஞலே ஆவ தொன் றில்லை

தாய்:
மாதவச் செல்வ மங்கை யிவள் யான்
பத்து மாதஞ் சுமந்து பெற்ற
புத்திரி, என்னைப் புறக்கணித் திட்டாள்
பேதை யானே பெற்ற பாசத்தால்
சாதலின்றித் தவிக்கின்றேனே!
இவளையன்றி யெது விதகதியும்
இல்லா என்னை இவள்கை விட்டாள்
பொல்லா நாயேன் போவது மெங்கே?

முனி:
தாயே உந்தன் சஞ்சலம் உணர்கிறேன்
ஆயினும் உனது அருமை மகளின்
உள்ளமோ மிகவும் உடைந்திருக் கின்றது
காசுக் காக காதலை விற்கும்
நீச வாழ்வை நெருப்பென நினைக்கும்
இச்சிறு பெண்ணை எதற்காக நீயும்
இச்சைக் கெதிராய் நச்சரிக்கின்ருய்?

தாய்:
ஞானக் கடலே! நங்கை இவளைக்
கணிகையர் குலத்துக் கன்னியர் செய்யும்
பணியைத் தானே பார்க்கச் சொன்னேன்
சின்னஞ் சிறிய செல்வி யிவளின்
அன்னை யெனக்கிவ் வுரிமை யிலையா?

காம:
புழுத்துப் போன பாதையைக் காட்டும்
உளுத்துப் போன உன்தன் உரிமை

முனி :
மகளே உன்தன் மாதாவை இவ்வாறு
இகழ்தல் நன்றே? இதுதவ றன்றே?

காம :
மாசில் லாதோய் மன்னிக்க வேண்டும்
பெற்ற பிள்ளை யென்னும் எண்ணம்
சற்று மின்றித் தாசி யாக்க
அன்னை முயல்வதும் அடுக்குமோ சுவாமி
என்னை யீன்றவள் என்பதற்காகப்
புன்மைச் செயலைப் புரிவனே ஐயா?
பெற்ற தனது சொற்படி கேட்டல்
ஒன்றே முறையென உடும்புப் பிடியாய்
நிற்கின் ருளே நீதியோ முறையோ?

தாய் :
சிவனருட் செல்வ செல்வி இவளைப்
பெற்றவள் நானே என்பதற் காக
என்
சொற்படி நடக்கத் தூண்டிட வில்லை
மகளை வளமாய் வாழ வைத்துப்
புகழைத் தேடப் பூமியில் விழைதல்
எந்தத் தாய்க்கும் இயற்கையே யாகும்
அருமை யாகப் பெற்ற மகளின்
பெருமை கண்டு பெருமிதம் அடையும்
ஆசையாலே இவளைப் பார்த்துக்
கடமையிலிருந்து தவறுதல் தீதென்று
உரிமை யோடு ஒருசில சொன்னேன்
ஆனல் இவளோ ஆத்திரத் தோடு
வீணுக வீட்டை விட்டுக் கிளம்பித்
தவம்புரி தற்காய் தங்களை யடைந்துளாள்

முனி :
தவத்தை விரும்பும் தையலை, வீணய்
அவத்தில் செலுத்துதல் அநீதி யம்மா

தாய் :
தவத்தை விரும்பித் தானு வந்தாள்?
அவளின் போக்கை அடிக்கடி யானும்
தவறு என்றேன், தான்சொல் வதையே
சரியென என்னை ஏற்றிடப் பணித்தாள்
முடியா தென்றேன், மூண்டது சண்டை
குடியைக் கெடுக்கும் கோடரிக காம்பின்
வடிவில் வந்தவள் வஞ்சித்து விட்டு
அடிகாள்! உங்களை அடைந்துநிற் கின்ருள்

முனி :
தாயே உன்தன் சேயின் உளப்படி
நீயேன் நடக்க நினைக்கிரு யில்லை
கொஞ்சக் காலம் விட்டுக் கொடுத்தால்
வஞ்சிக் கொடி உளம் மாறவும் கூடும்

தாய் :
விட்டுக் கொடுத்தத ஞலே தானே
கெட்டுப் போனுள்...

(9ம் பக்கம் பார்க்க)

# பொய்யாமொழி பாடிய வையாபுரி ஐயர்

க. சி. குலரத்தினம்

தமிழ் வளர்த்த பரராசசேகர மன்னனைப் பரராசசிங்கன் எனவும் வழங்கியுள்ளார்கள். பரராசசேகரனின் அபிமானத்துக்குரிய புலவர்கள் வரிசையில் கவிவீரராகவ முதலியார் என்பாரும் ஒருவர். அவர் தமிழ்நாட்டில் களந்தை என்னும் ஊரில் தோன்றி, கல்வி கரையிலாக் காஞ்சி நகரில்' வாழ்ந்து கல்வி கற்று நிரம்பிய புலமை பெற்றவர். அவர் கண்பார்வை இல்லாதவர் என்றும், அரிவரி எழுத்துகளை முதுகில் எழுதிக் காட்டப் புலனுணர்வால் அறிந்து விரைந்து முன்னேறியவர் என்றும், கேள்விப் பெருக்கால் பல நூல்களையும் அறிந்தவர் என்றும் கூறுவர்.

## கவிவீரராகவன்

## கவிச்சிறப்பு

இப்புலவர் பெருந்தகையாழ்ப்பாணதில் பரராசசேகரன் தமிழ் புலவன்எனக் கேட்டறிந்து, அவனை காணச் சீடர்களுடன் வந்தவர் என்றும்

## தமிழ் தந்த தாதாக்கள்

அவர் பாடிய பாடல்களைக் கேட்டு, பரராசசேகரன் வியந்து பாராட்டி' அவருடன் நெருங்கிய நட்பு கொண்டவன் என்றும், அறியக்கிடக்கிறது ''விரகனு முத்தமிழ் வீரராகவன் வரகவி மாலையை மதிக்கும் போதெலாம்'' என்றும், ''களந்தைக் கவி வீரராகவன் கச்சியிலே வன்னெஞ்சம் ஏடெனக் கற்றான்', என்றும், புகழ்ந்தவன். அவர் மறைந்த போது ''இந்நாட்டுப் புலவர் உனக்கு எதிரிலையே கவிவீரராகவா நீ பொன்னுட்டுப் புலவருடன் வாது செய்யப் போயினையோ புகலுவாயே'' என்றும் பாடினன்.

கவிவீரராகவன் செய்த நூல்கள் பன்னிரண்டென்பர். அவற்றுள் பரராசசிங்கன் வண்ணம் என்றொரு நூலும் உள்ளது. ஏனையவை திருக்கழுக்குன்றப்புராணம், திருக்கழுக்குன்றநாதர்உலா திருவாரூர் உலா கீழ்வேளூர்உலா சேயூர்க் கலம்பகம்' சேயூர்முருகன் பிள்ளைத்தமிழ், விட்டுனர் அம்மையப்பன்பிள்ளைத்தமிழ், சயத்தாற்றரசன்உலா, சந்திரவாணன் கோவை' பஞ்சரத்தினம், திருக்கழுக்குன்றமாலை என்பனவாம்.

வீரராகவமுதலியார் பாடிய நூல்களுள் பரராசசிங்கன் வண்ணம் என்னும் நூல் பரராசசேகரனைக் குறிப்பதாம். எனவே வீரராகவ முதலியார் களந்தைகாஞ்சி, நல்லூர் ஆகிய முப்பெரு நகரங்களை இணைத்தழுதுபெரும் புலவராவர்.

## வையா பாடல்

நல்லூரிலிருந்து அரசு செய்த பரராசசேகரனின் தம்பி, செகராசசேகரனின் ஆட்சிக் காலத்தில் 1519—1561 அவைக்களப் புலவராய் அலங்கரித்த வையாபுரிஐயர் என்பார் இலங்கை அரசர்களில் ஒரு சிலரின் குலங்கள் கோத்திரங்களை விளக்கிப் பாடிய நூல் அவர் பெயரால் வையாபாடல் என வழங்குகிறது இந்த நூலாசிரியர் பெயர்நுதலும் பாடல் ,,குலம்பெறு ததீசிமா முனிதன் கோத்திரத் திலங்கு வையாவெண இசைக்குநாதனே'' என வருகின்றது.

இந்நூல் இதிகாசபாணியில், அஃதாவது இவ்வாறு நடைபெற்றது என்று சம்பவங்களைக் கூறுமுகத்தால் எழுந்த வரலாற்று நூலாகும். குல முறை மன்னர்களைக் கூறுவதோடு, குலங்கள் குடிகள் வந்த வரலாறுகளும்' வந்து குடியேறியவர்கள் கொண்டுவந்து புகுத்திய வழக்கங்கள் வழிபடு தெய்வங்கள் வழிபடுமுறைகள் யாவும் வரலாற்றுக்கமைவாகவே உள்ளன. இவாறு வந்தவர்களுள் வன்னியர்கள் என்னும் வல்லாளர்களும் ஒரு சாராராவர்.

## யாழ்ப்பாண வரலாறு

இந்த நூல் யாழ்ப்பாணத்தார்வரலாற்றைக் கூறுவதோடு விடாது தேசீய ஒருமைப் பாட்டு நெறியில் ''இலங்கை மண்டலத்தோர் தங்காதை'' யையும் கூறுகிறது. எனவே சேர மண்டலம், தொண்டை மண்டலம், சோழ மண்டலம், பாண்டி மண்டலம், என்பனவோடு, ஈழமண்டலமும் ஒன்றாய்த் தமிழ் மண்டலங்கள் ஐந்தும் தத்துவமாமே என என்றோ எப்பவோ திருமூலநாயனர் அருளியமையும் சாதகமாய் யுள்ளது.

இந் நூல் கலிவிருத்தம், அறுசீர் ஆசிரியர்விருத்தம், எண்சீர் ஆசிரியவிருத்தம் முதலியபாவினங்கள் பயின்றுவர, 84பாடல்களாலானது. ஏட்டிலிருந்து அச்சுவாகன மேறுவதற்கிடையில் அரிய செய்யுள்கள் சில உருமாறியும் அழிந்தும் உள்ளன.

இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள இடப்பெயர்களை அருமையான அடைமெழிகள் சூட்டி வழங்கிப் பாடிய பாடல்கள் சுவையாயுமுள்ளன. பொன்னகர் நிகரும் கதிரையம்பதி, குதிரைமுகமது மாறக்குணமுள தீர்த்தம், திறமுளகிரிமாமலை, அடங்காப்பற்று, கட்டுக்குளம், குதிரைமலை, கெருடாவில், செட்டிக்குளம், தம்பலகாமம், திரியாய், துணுக்காய், நெடுங்கேணி, நொச்சிமோட்டை, மட்டக்களப்பு, மாமுனை, முள்ளியவளை, வாவெட்டி, வற்றுப்பளை, விடத்தல்தீவு, வெருகல் முதலான பல ஊர்ப்பெயர்கள் தூய செந்தமிழில் ஒலிக்கின்றன. அபிவிருத்தியாளர் இவ்வொலிகளைப் பேணிப் பாதுகாத்தல் பெருங்கடனாகும்.

# விசித்திரமான விலங்கினங்கள்

உலகில்எண்ணிலடங்கா விலங்கினங்கள் உள. நாட்டுக்கு நாடு வேறுபட்ட விலங்குகளைக் காணலாம். இவற்றுள் சிலவற்றை இங்கு தொடர்ந்து அறிமுகம் செய்கிறார் அரியாலையூர் வி. என். எஸ். உதயசந்திரன்.




விலங்குகள் உலகம் முழுவதும் பரந்து வாழ்கின்றன. ஆனல் அவை நாட்டுக்கு நாடு இடத்துக்கு இடம் மாறுபட்டும் உருமாறியும் பல்வேறு குணதிசயங்களுடன் காணப்படுகின்றன. இவ் விலங்குகளின் வாழ்க்கை வேடிக்கையானதாகவும் விந்தையானதாகவும் வியப்பிற்கு உரியதாகவும் உள்ளது. மனிதன் விந்தைமிகு விலங்குகள் பலவற்றின் வாழ்க்கையில் தலையிட்டு அவற்றை அழித்து வருகின்றான். பல விலங்குகள் இயற்கையின் மாற்றத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் அழிந்துவிட்டன. இன்று பல நாடுகளில் அழிந்து வரும் விலங்குகளைப் பாதுகாப்பதற்கு அரசாங்கங்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றன. இலங்கையிலும் விலங்குகளைப் பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விந்தைமிகு விலங்குகள் பற்றிய வியப்பூட்டும் சில தகவல்களை அறிய ஆவலாக இருக்கின்றீர்கள் அல்லவா?

## மரக்கங்காரு

நிலத்தில் வாழும் கங்காருவைப் பற்றி அறிந்திருப்பீர்கள். ஆனல் மரத்தில் வாழும் கங்காருவைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கின்றீர்களா? அவுஸ்திரேலியாக் காடுகளிலே காணப்படும் இம் மரக்கங்காரு தனது வாழ்வின் பெரும் பகுதியை மரங்களிலேயே கழிக்கின்றது மரம் ஏறுவதிலும் மரத்துக்கு மரம் தாவுவதிலும் அது பிரசித்தி பெற்றது. உருவத்தில் சிறிதாகக் காணப்படும் மரக்கங்காருவின் வால் மிகவும் நீளமானது இலைகளே மரக் கங்காருவின் பிரதான உணவாகும்.

## கறுப்புக் கரடி

வட அமெரிக்காவில் கறுப்புக் கரடிகள் அதிகமாக வாழ்கின்றன. தானுண்டு தன் பாடுஉண்டு என்று வாழும் இவற்றின் வேலை உணவு தேடித்திரிவதுதான்.

## துருவக் கரடிகள்

குளிர் மிகுந்த வட துருவப் பகுதிகளில் இந்தக் கரடிகள் வாழ்கின்றன. துருவக் கரடிகளின் பார்வை ஆற்றலும் மோப்பத் திறனும் மிகவும் கூர்மையானவை. அவை ஒரு மைலுக்கு அப்பால் இருக்கும் பிராணிகளைக் கூடக் கண்டு கொள்ளும். அதிகமாகப் பசித்தால் இத் துருவக் கரடிகள் மனிதர்களைக் கூடக் கொன்று தின்று விடும். இவற்றுக்குத் தங்கள் குட்டிகளின் மேல் அன்பு அதிகம். இரை எதுவுமே கிடைக்காமல் பட்டினி கிடந்து மெலிந்திருக்கும் சமயங்களில் கூட இவை கிடைக்கும் இரையைத் தமது குட்டிகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்து விட்டுப் பட்டினி கிடக்கும் என மிருகங்களைப் பற்றிய விபரங்களைத் திரட்டும் விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

வி. என். எஸ். உதயசந்திரன்

கரடிக்குட்டிகளுக்கு விளையாடுவது என்றால் அலாதி ஆனந்தம். அவை மிகவேகமாக மரமேறும். குட்டிக் கரடிகள் குழப்படி செய்தால் தாய்க்கரடி அவற்றின் காதைப் பிடித்துத் திருகிவிடும். குட்டிகள் தாயை விட்டுப் பிரியமாட்டா. அப்படிப் பிரிந்தால் அவை மணிக் கணக்கில் அழுது கொண்டே இருக்கும்.

## துருவ நரிகள்

பனி நிறைந்த வடதுருவப் பிரதேசங்களில் துருவ நரிகள் வாழ்கின்றன. இந்த நரிகள் நன்றாக நீந்தும். ஆனல் அவசியமேற்பட்டால் மட்டுமே நீந்தும். மற்றும்படி நீந்தா. நகரும் பனிக் கட்டிகள் மேல் ஏறிக் கடலில் குஷியாகப் பிரயாணம் செய்யும். துருவகி

(12ம் பக்கம் பார்க்க)

# உறவும் துறவும்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

முனி :

... என்ன சொல்கிறாய்
எல்லாம் எனக்கு மயக்கமாய் உளதே

தாய் :

தவசி ரேஷ்ட! தையல் இவளின்
சரித்திர மெல்லாம் சாற்றக் கேண்மின்
அருமை யான எந்தன் மகள்ஓர்
அழகிய அந்தண இளைஞனைக் கண்டு
பழகத் தொடங்கினள். பழக்கம் பின்னர்,
காதலாகக் கனிய, அவனைத்
திருமணம் செய்யச் சித்தம் பூண்டாள்
காசே யில்லாக் காளையை மணந்து
மோசம் போகப் போகிறாள் என்று
பாசத்தோடு தடுத்துப் பார்த்தேன்
ஆனல் இவளோ அசையவே யில்லை
தானாய் மாறுவாள் என்று சிலநாள்
பேசா திருந்தேன். (அழுதபடி) பின்னர்...

முனிவர் :

பின்னர்...

தாய் :

ஒருநாள் அவனுடன் ஓடியே விட்டாள்
(சற்று நிறுத்தி)
ஓடிய மகளை நாடிச் சென்றேன்
அவனுடன் இவளை
அழைத்து வந்தேன். சிலநாள் அவனுடன்
வாழவும் வைத்தேன்.

காம :

ஆமாம் சுவாமி
அழைத்து வந்து அவரை வீட்டாற்
கலைத்தே விட்டாள் கல்நெஞ்சக் காரி

தாய் :

உழைக்கத் தெரியா உதவாக் கரையைக்
கலைத்தது தவறா? காசில்லானை
மணந்து என்தன் மகள்பின் மடிந்து
பிணமாய்ப் போவதைப் பொறுப்பனா சுவாமி

காம :

காதலின் புனிதத் தன்மை உணராக்
காதகி உனக்குக் காசே தெய்வம்
ஆதலால் தானே என்னைப் பார்த்து
வீட்டை விட்டு வெளிக்கிடச் சொன்னாய்

தாய் :

ஆத்திரத் தாலே அப்படிச் சொல்லிப்
போட்டேன் கண்ணே புறப்படு போவோம்

காம :

அம்மா அவருடன் வாழ என்னை
விடுவதா யிருந்தால் வீட்டுக்கு வருவேன்
முடியா தென்றால்...முடியா தம்மா

தாய் :

முடியாது மகளே முடியாது இந்தப்
பிடிவாதம் வேண்டாம் பின்னால்
வருந்துவாய்

முனிவர் :

காம மஞ்சரி கண்ணீர் விடும்உன்
தாயுடன் செல்க தவத்தை விடுக.

[வளரும்]

# இவ்வாரம் எப்படி?

திருமலை வே. ரவீந்திரன்

## மேஷம்

தாமத குணத்தின் மூலம் தவறுகள் நடக்கலாம். வேண்டாத விவாதங்களால் வீண் பெயர் கேட்க நேரிடலாம். தாம்பத்திய வாழ்க்கையில் மகிழ்ச்சி காணப்படும். வாழ்க்கை கரும்பு போல் இனிக்கும் எதிரிகள் எக்காளமிடுவர். மறைந்த நினைவுகள் மீண்டும் தலை தூக்கும். அமைதியே நன்று. நீண்டநாள் கொடுத்த கடன் மீண்டும் வந்துசேரும்.

## ரிஷபம்

காதலர் எண்ணம் கைகூடும். பிதாவழித் தனமும் சேரும். பொறியியலாளர் மத்தியில் புகழ்ச்சி நிலவும். நண்பர்களே. உங்கள் முன்னேற்றத்திற்குத் தடைக் கல்லாக இருப்பர் வைத்தியச் செலவுக்கும் இடமுண்டு களஸ்திரப் பேச்சும் அவ்வழிச் சுகமும் வரவுமுண்டு வருமானத்தில் வீழ்ச்சிதென்படும். எதிர்பாராத விபத்துக்களும் இடம் பெறும் எதிலும் நிதான புத்தியுடன் செயல்படவும்.

## மிதுனம்

சொகுசான வாழ்க்கையை விரும்புவீர்கள். ஆடம்பரமான ஆடைகளில் மன நாட்டம் கொடுக்கும். பெரியவர் ஒருவரின் ஆதரவு கிடைக்கும். தெய்வத்தின் அருளும் வேண்டும் மொட்டைக் கடிதம் ஒன்று பரபரப்பை ஏற்படுத்தும். தொழில் துறையிலும் நஷ்டம் ஏற்படும் அவப்பெயரை உருவாக்கச் சிலர் முனைவர். காதலர் கனி மொழி காதுகளை இனிக்க வைக்கும்.

## கடகம்

பொதுப் பணிகளில் ஈடுபடுவீர்கள் சிலர் புண்ணிய ஸ்தல யாத்திரைகளும் மேற்கொள்ள இடமுண்டு படித்தவர்களின் தொடர்பால் பயனடைவீர்கள். கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். ஓவியர்கள் வாழ்க்கையில் ஒளியேற்படும். இல்லத்திலும் உவகை காணப்படும். சிந்தனையை ஒரு வழிப்படுத்திச் செயல்படவும்.

## சிம்மம்

பொருளாதாரத் துறையில் உயர்ச்சி தென்படும். சிலர் உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் மாட்டிக் கொள்வர். புதுத் தொழிற் துறைகளில் மனம் நாடும். தூர தேசப் பிரயாணங்களும் செய்திகளும் கிட்டலாம். சிலருக்குப் பூமி மாற்றங்களும் புது மனை கோலத் திட்டங்களும் உருவாகலாம் பிதா வழிப் பெருமையும் பெரியோர் புகழும் கிட்டும்.

## கன்னி

அவசர முடிவும் ஆத்திரப் போக்கும் ஆபத்தான நிலையை உண்டாக்கலாம். பயணங்களின் போது பொருள் கை நழுவக்கூடும். கவனம் வேண்டும். சிலர் எதிர்காலம் பிரகாசமடைய நடவடிக்கை எடுக்கப்படும். செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும். கௌரவம் உயரும்.

## துலாம்

அரச பயத்திற்கு இடமுண்டு வழக்கு விவகாரங்களில் ஈடுபடாதிருக்கவும். சகோதர வழி மனக்கிலேசத்திற்கும் இடமுண்டு குடும்ப நிலை நிறைந்த செல்வாக்கைக் கொடுக்கும். திடீரென ஏற்படும் முடிவுகள் சிக்கலை உண்டு பண்ணப் பார்க்கும். புனைந்துரைகளைப் பரப்புவதற்கு சிலர் முனைவர். வருவாய் நிலையும் வசதிக்கேற்ற முறையில் செலவுகளும் உண்டாகும்.

## விருச்சிகம்

சிறியோர் சீற்றம் பெரிய மாற்றங்களை உருவாக்கும். குடும்ப நிலையில் சிறு புயலுக்குப் பின் அமைதி நிலவும். இனப் பந்துக்கள் மத்தியில் பூசல்கள் தோன்றும். வணிகர்கள் பாதையில் வறட்சி தென்படும். சிலருக்கு உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

## தனுசு

தாய் வழியால் சுகமும் வாகன விடயத்தில் சில திருப்பங்களும் சகோதர சஞ்சலங்களும் உண்டு குடும்பக் கடமையுணர்வுடன்செயல்படவும் திடீரென ஏற்படும் முடிவு தங்களை அடி சறுக்க வைக்கும்.

## மகரம்

புத்திரர் மகிழ்ச்சியும் புதுமையில் நாட்டமும் புண்ணிய விருப்பும் பெரியோர் வாழ்த்தும் வாகன விருப்பும் வாழ்க்கை வசதியில் சிறு மாற்றமும் ஏமாற்றமும் வழமைக்கு மாறாக இருக்கும். பொறுமையின் நிழல் தொடரும் பெரும் புகழைப் பேச்சு வன்மையால் தேடிக்கொள்வீர் சில அதிஷ்டங்களும் இடம் பெறலாம்.


## கும்பம்

ஆமை வேகத்தில் காரியங்கள் நடை பெறும். பகைவர்களின் சூழ்ச்சி பலமாக இருக்கும். வருமான நிலை திருப்தி தரும். புத்திரர் மகிழ்ச்சி உண்டு. தாய் வழியால் தனமும் நல்ல பெயரும் கிடைக்கும். சகோதர வழி தேடித் தரும் பழி சிறு பிரிவுக்கும் அரச பயத்திற்கும் சிறுரோகத்திற்கும் இடமுருவாகும்.

## மீனம்

வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம் ஏற்படும் அவசரக் கோலம் சிக்கல்களைத் தோற்றுவிக்கும். வீணை சிந்தனைகளில் சோர்வு நிலை தென்படும் செய் தொழில் சிறப்புண்டு. சுற்றுடலில் நல்ல திருப்பமேற்படும். நீண்ட பிரயாணங் குறித்துத் திட்டமேற்படும். தன்மான மிகுதிக்கும் தன வரவிற்கும் இடமுண்டு. கல்வித்துறையில் நல்ல முன்னேற்றம் உருவாகும்.


# நவீன உல்லாசக் குடிசைகள்



## எல்லாம் உங்களுக்காகவே

- பிரதி சனி, ஞாயிறு நாட்களில் Buffet Lunch - ரூபா 50/- மட்டுமே
- பிரதி சனி தோறும் Bar-Be-Que-Dinner - ரூபா 60/-
- உல்லாச வார விடுமுறை தினங்கள் (Weekend Package) வெள்ளி இரவு முதல் ஞாயிறு மதியம் வரை

(அனைத்து உணவுடனும், தங்குமிட வசதிகள் உட்பட)

குளிரூட்டிய அறைகள் - இருவருக்கு ரூபா 590/-

குளிரூட்டிஅற்ற அறைகள் - இருவருக்கு ரூபா 500/-

பிற்குறிப்பு: மேற்கூறிய கட்டணங்களுடன் 10% சேவிஸ் சார்ஜ்

- கலியாணம் அல்லது விருந்துபசாரம் கொண்டாட வசதியாய் விசாலமான களியாட்டு மண்டபமுண்டு.
- புதுமண தம்பதிகளுக்கு விசேஷ சலுகைகள்

Harbour View Hotel
Keerimalai Road, Kankesanturai, Sri Lanka.

ANOTHER HOTEL MANAGED BY
AITKEN SPENCE & CO LTD
Lloyds Building, Sir Baron Jayatilaka Mawatha
Colombo 1. Tel : 27861-8 547161

Telegrams : ANCHOR Kankesanturai. Telephone : 22605 Jaffna.

வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூங்கா கடலோர உல்லாச பயணிகள் ஹோட்டல்

காங்கேசன்துறை

ஹாபர் வியூ ஹோட்டல்

THE ONLY SEASIDE GARDEN RESORT HOTEL IN THE NORTH


# சீமையிலே ஸ்ரீ கணபதி

(8ம் பக்கத் தொடர்ச்சி)

வாத்திய இசை, கவிதை அரங்கு, விரிவுரைகள், துள்ளிசை, பரதநாட்டியம் போன்ற பல அம்சங்கள் இதில் அடங்கியிருந்தன.

ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம் வெளியிட்டுவரும் 'ஈழச்செய்திகள்' என்ற பத்திரிகைக்கு நிதி திரட்டும் முகமாக இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

இவ்வருடம் ஏப்ரல் 14ம் திகதியும் ஜூலை 28ம் திகதியும் ''சங்கேமுழங்கு'' மீண்டும் மேடையேற்றப்பட விருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழர் பிரச்சினை—

## இலண்டனில்

## புகைப்படக்கண்காட்சி

ஈழத்தமிழர் பிரச்சினை பற்றிய புகைப்படக் கண்காட்சி ஒன்று சமீபத்தில் இலண்டனில் நடைபெற்றது' ஹம்ப்ஸ்டெட் டவுண் ஹால் மண்டபத்தில் நடைபெற்ற இப் புகைப்படக் கண்காட்சியை ''இலண்டன் தமிழ்மன்றம்'' ஒழுங்கு செய்திருந்தது

நான்கு பிரிவுகளுக்குக் கீழ் இக்கண்காட்சி அமைந்திருந்தது.

தமிழ் இனத்திற்கெதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட காட்டு மிராண்டித்தனமானதும் மிலேச்சத்தமைானதுமான அடக்குமுறைகள் முதலாம் பிரிவு

அடுத்தடுத்து வந்த சிங்கள அரசுகளின் மேலாதிக்கத்தை எதிர்த்து நடத்தப்பட்ட ஜனநாயக ரீதியான, அஹிம்சை வழியிலான எதிர்ப்புகள் இரண்டாம் பிரிவு.

சாத்வீகப் போராட்ட முறைகளின் தோல்வியும், ஆயுதப் போரட்ட இயக்கங்களின் பிறப்பும்- இது மூன்றும் பிரிவு.

தமிழ்க்குடி மக்களின் வீரம் செறிந்த ஆயுதப் போராட்ட வரலாறு நான்காம் பிரிவு.

இந்த நான்கு பிரிவுகளின் கீழும் எல்லாமாக 300 க்கும் மேற்பட்ட புகைப்படங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

1958, 1961, 1974, 1977, 1979, 1981, 1983 ஆகிய வருடங்களில் இடம் பெற்ற இன ஒடுக்குமுறைச் சம்பவங்கள் விரிவாக புகைப்படம் மூலம் விளக்கப்பட்டிருந்தன. 1961 ன் சத்தியாக்கிரக இயக்கம் உட்பட ஏனைய சாத்வீக எதிர்ப்பு முறைகளும், அதன் பின் இடம்பெற்ற அஹிம்சை தழுவாத எதிர்ப்பு முறைகளையும் இப்புகைப்படங்கள் வெகு தல்லியமாக விளக்கி நின்றன.

மூன்று மணி நேரம் நடைபெற்ற இப்புகைப்படக் கண்காட்சியை இங்கிலாந்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வந்த 1200 க்கும் மேற்பட்டோர் பார்வையிட்டனர். இத்தகைய ஒரு கண்காட்சி இங்கிலாந்தில் நடைபெற்றது இதுவே முதல் தடவையாகும்.

உணவு பரிமாறுபவர்: என்ன அண்ணர் அவசர அவசரமாகச் சாப்பிடுகிறீங்க. அப்படி என்ன அவசரம்?

சாப்பிடுபவர்: இல்லை தம்பி சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் போதே சாப்பாடு விலை கூடினாலும் என்றுதான்.

வே. து. சிவபாலன்

# தமிழர் - யப்பானியர் வாழ்வியல் சடங்குகளில் மகளிர் சமபங்கு பெற்றனர்

திருமதி மனோன்மணி சண்முகதாஸ்

தமிழ்ப் பெண்மணிகள் பலரும் இலக்கியங்களை ஆக்குவதன் மூலம் சமூகப் பணியாற்றியுள்ளனர். சங்கப் பாடல்களிலே பல பெண்பாற் புலவர்களின் பாடல்களும் இடம் பெற்றுள்ளன. அவை தனிப் பாடல்களாகவே அமைந்துள்ளன. இதே போன்று யப்பானிலே தொகுக்கப்பட்ட இலக்கியங்களிலும் பல பெண் பாலாரின் தனிக் கவிதைகள் இடம் பெற்றுள்ளன. ''ஹயக்கு நின் இஸ்ஸி புயூ'' என்னும் கவிதைத் தொகுதியிலேபல பெண்களின் தனிப் பாடல்களும் இணைக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களில் சீன மொழிச் சொற்கலப்பைக் காண முடியாது. யப்பானியரது பேச்சு மொழியிலேயே பாடப் பட்டுள்ளன. யப்பானியர் பெண்மையின் அறிவுத் திறத்தை மதித்து

## தமிழர் - யப்பானியர் வாழ்வியலில் பெண்மை 3

வாழ்ந்ததையே இவ்விலக்கியப் பதிவுகள் காட்டுகின்றன'

### இரண்டு பெண்மணிகள்

தமிழர்வாழ்வியலிலும் இலக்கியப் பணியால் உயர்ந்து நிற்பவர் புனிதவதி என இயற் பெயர் கொண்ட காரைக்கால் அம்மையார். வணிக சமூகத்திலே வாழ்ந்த இவர் காட்டிய பக்தி நெறி உலகிற்கே உயர்ந்த அன்பு நெறியாயுள்ளது. இறைவனின் தோற்றத்தினை இயற்கையிலே காணச் செய்தவர், வழிபாடு பற்றிய சிந்தனையிலே புதிய நெறியை இணைத்தவர். காரைக்காலம்மையாரின் வரலாற்றிலே நடந்த அற்புத நிகழ்ச்சிகளை இன்றுள்ளவர் ஏற்றுக் கொள்ளா விட்டாலும் அவர் பாடிய பாடல்களால் அவரது சமூகப் பணியினை ஏற்றுக் கொள்வர். திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம். திருவிரட்டை மணி மாலை, அற்புதத் திருவந்தாதி என அவரது பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பெண்மையின் வரம்பிலாத ஆற்றலைக் கண்டு மனிதன் அஞ்சியதற்கு காரைக்காலம்மையாரின் வரலாறு சிறந்த உதாரணமாகும்.

அவனே இருசுடர்தீ ஆகாசம்
ஆவான்
அவனே புவிபுனல்காற்ரு
வான் - அவனே
இயமான ஞய் அட்ட மூர்த்
தியுமாய் ஞான
மயனுகி நின்ருனும் வந்து''

என்னும் காரைக்காலம்மையின் பாடல் இயற்கையில் இறை வழிபாடு இணைந்திருந்ததை நன்கு விளக்குகிறது. பக்தி நிலையிலே வழிபாடு செய்யும்போது இறைவன் தோற்றத்தையே நேரில் காணலாம் என்ற அவரது புதிய சிந்தனையே தமிழர் வாழ்வில் இறையன்பு என்ற உயர்ந்த கடவுட் குணத்தை யாவரும் அறிய வைத்தது. பின் வந்த பக்தி நிலைப்பட்ட யாவரும் அம்மையார் வழியிலே சென்று இறையன்பை உணர்ந்து பல பாடல்களைப் பாடியுள்ளனர். பதிகம் என்னும் இலக்கிய வடிவத்தை முதலில் தமிழ் இலக்கியத்துக்கு அறிமுகம் செய்து வைத்தவர் காரைக்காலம்மையாரே. யப்பானில் புதிய இலக்கிய மரபினை ஆரம்பித்து வைத்த முரசாக்கி அம்மையாரைப் போல தமிழில் காரைக்காலம்மையார் விளங்குகிருர். இரு நாட்டினதும் இவ்விரு பெண்களதும் இலக்கியப் பணியை இன்றும் மதிக்கின்றனர்.

### பெண்களும் சடங்குகளும்

பெண் சமூக நடைமுறைகளிலே முக்கிய இடத்தை முற் காலங்களிலே வகித்ததையும் இலக்கியச் சான்றுகளால் இன்றுணரக் கிடக்கின்றது. யப்பானிய சிந்தோ வழிபாட்டுநடைமுறைகளில்பெணணும் முக்கிய இடம் பெறுவாள். புனிதச் சடங்குகளை நிறைவேற்ற அவளும் அனுமதிக்கப்பட்டிருந்தாள். இப்போதும் சிந்தோ கோவில்களில் ஆண்களும் பெண்களும் இணைந்தே நடை முறைகளைச் செயற்படுத்துகின்றனர். தமிழர் சமூக அமைப்பிலும் பெண்கள் வழிபாட்டு நடைமுறைகளைச் செயற்படுத்தியதைப் பல பழைய இலக்கியப் பாடல்கள் கூறுகின்றன! பூவும் பொங்கலும் சொரிந்து மடை போட்டு வழிபட்டதைச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. பெண்மையும் ஆண்மையும் ஒன்றிணைந்தே சமூகம் இயங்கியதால் தமிழரும் யப்பானியரும் வாழ்வியல் நடைமுறைகளிலே இருவருக்கும் சம பங்களித்திருந்தனர்.

### பெண்களும் வீட்டுப் பொறுப்பும்

பெண்ணுக்குச் சிறப்பாகச் சில கட்டுப்பாடுகளை இரு இனத்தவரும் நடைமுறைகளாக்கியுள்ளனர். இதனுல் பெண்குழந்தைகளையும் ஆண் குழந்தைகளையும் வளர்க்கின்ற நிலையிலே குறிப்பிடத்தக்க வேறுபாடுகளை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. யப்பானியர் பெண் குழந்தைகளைக் குறைந்த நிலையில் வைத்து மதிப்பிடுவதாக மேலைநாட்டவர் கருதுகின்றனர். யப்பானியரின் வாழ்வியலின் அடிப்படையிலான உயர்ந்த கோட்பாட்டை மேலைநாட்டவர் நன்கு விளங்கிக் கொள்ளவில்லை. பெண்குழந்தை ஒரு இனத்தை உருவாக்கி உயர் நிலைக்கு கொண்டு வரவேண்டிய பெரும் பணியை ஆற்ற வேண்டிய குழந்தையாகும். இதனுல் குழந்தைப் பருவத்திலிருந்து பெண்ணை அதற்காகத் தயார் செய்ய வேண்டியுள்ளது. பெண்மைக்கென இயற்கை வழங்கியுள்ள செம்மையான குணங்களையெல்லாம் நடைமுறைகள் மூலம் வளர்க்கவேண்டியே பெண் குழந்தைகளை மிகுந்த கட்டுப்பாட்டுடன் வளர்த்தனர். பழைய காலத்திலே சிறு வயதிலேயே யப்பானியப் பெண்குழந்தைகள் வீட்டுப் பொறுப்புகளை நிர்வகிக்கப் பழக்கப்பட்டனர். சிறு குழந்தையைப் பராமரித்தல், உணவு தயாரித்தல், உடைகளைசுத்திகரித்தல், ஆண்களை எதிர்ப்படாது ஒதுங்கியிருத்தல், வீட்டை ஒழுங்குபடுத்தல், என்னும் விடயங்கள் அனுபவமூலமாகத் தாயினுல் கற்பிக்கப்பட்டன. வீட்டுநிலையிலேயே பெண்குழந்தைகள் சமூகத்தையும் நாட்டையும் விளங்கிக் கொள்ள இவ்வறிவு பெரிதும் உதவியது.

பெண் குழந்தைகள் பாடசாலைக்குச் செல்லும் போது ஆண்குழந்தைகளுடன் சரிசமமாக நடந்து செல்ல அனுமதிக்கப் படுவதில்லை. ஆண்குழந்தைகள் உணவு உண்டபின்னரே பெண்குழந்தைகள் உணவுண்ணும் வழக்கமிருந்தது. நீராடும் போதும் இந்நடைமுறை பேணப்பட்டது. தனது சகோதரர்களுக்காக எதையும் விட்டுக்கொடுக்கவும் இதன் மூலம் பெண் பயிற்சி பெற்ருள். திருமண விடயத்திலும் கட்டுப்பாடான நடைமுறைகளின் பயிற்சியால் கணவனையும், குழந்தைகளையும் தாங்கிநிற்கவே பெண் விரும்பும் ஒரு நிலைஉருவாகியது. இத்தகைய நடைமுறை தமிழர் வாழ்வியலிலும் பெண் குழந்தைகளைப் பொறுத்தவரை சிறப்பாகப் பழங்காலத்திலே செயற்பட்டு வந்துள்ளது. இந்நடை முறை ஒற்றுமை உலகிலே பல இனங்களிலேயும் காணப்படினும் மரபாக மாற்றமின்றித் தமிழரிடையேயும் யப்பானியரிடையேயும் சிறப்பாகப் பேணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்ப்பெண்ணும் யப்பானிய பெண்ணும் சில கட்டுப்பாடுகளுக்கு உட்படுத்தப்பட்டனர்

நவீன விஞ்ஞான தொழில் நுட்ப வசதிகள் பெருகிய தற்காலத்தில் வாழ்ந்த யப்பானியப் பெண்கள் குடும்ப நிலையில் இன்னமும் பழைய மரபான வாழ்வையே மேற்கொண்டுள்ளனர். வீட்டுப் பொறுப்புகளில் யப்பானிய ஆண்கள் ஈடுபாடுகொள்வது மிகக் குறைவாகவே உள்ளது. இதனுல் வீட்டுப் பொறுப்பு, குழந்தை வளர்ப்பு என்பவற்றில் பெண்ணே முழுமையான பங்கினை ஏற்றுவாழ்கிருள். நகரப்புறங்களிலே வாழ்பவர்களிடையே கூட இந்நிலை இருப்பதை நோக்கும்போது பண்பாட்டின் இறுக்கமான நடைமுறைகளையே சிந்திக்க வேண்டியுள்ளது

பிற்காலங்களில் தமிழர்யப்பானியர் வாழ்வியலில் பெண்மை பற்றிய இழிவான கருத்துக்களும் தோன்றியுள்ளன அதற்கு முக்கியகாரணமாக அமைந்தது புத்தசமயத்தின் நடைமுறைக்கோட்பாடுகளேயாம். பெண்ணின் வரம்பிலா ஆற்றலை அடக்கப் புத்தசமயம் பெண்மாயை என்ற கருத்தை வெளியிட்டு நடைமுறைப்படுத்த ஆரம்பித்தது. யப்பானில் ''தொருகவா'' நிர்வாகத்தின்போது இந்நிலை மோசமடைந்தது பெண் ஆணின் அடிமையாகவே கருதப்பட்டாள். அவள் ஆணுக்குப் பயந்து கீழ்ப்படிந்து வாழக்கடமைப் பட்டவள் என்ற கோட்பாடு சமூகநிலையில் உறுதிபெற்றது. அவள் ஆணைக்காட்டிலும் பாவம் செய்தவள் எனப்பலரும் நம்பும்வகையில் வாழ்வியலில் பலபுதிய நடைமுறைகளும் தோன்றின.

ஆனுல் 1867ம் ஆண்டு ''தொருகவா'' நிர்வாகம் வீழ்ச்சியடைந்து ''மெஜி'' நிர்வாகம் யப்பானில் தோன்றிய போது பெண்மையின் சிறப்பு மீண்டும் போற்றப் படலாயிற்று. பெண்களின் கல்விநிலையை உயர்த்த நடவடிக்கைகள் ஏற்பட்டன. வீட்டுநிலையில் மட்டுமன்றி வெளிநிலையிலும் பெண் தன் பணியைச் செய்ய இதனுல் வாய்ப்பேற்பட்டது. யப்பானியப் பெண்களின் வரலாற்றினை காலவரையறைப்படி வகுத்துக்கூறும் ''ஓஇ நிகன் ஜோசேஇசி'' என்னும்நூல் விரிவாக இம்மாற்றங்களை விளக்கியுள்ளது உலகத்தவர்களுக்கு யப்பானிய பெண்கள் பெற்றிருந்த சிறப்பை அந்நூல் தெளிவாகக் காட்டியுள்ளது. இடைக்காலத்தில் ஏற்பட்ட அவலத்தை இன்றும் புலப்படுத்தும் வகையில் பல சொற்றொடர்களிலும் பழமொழிகளிலும் பெண்மை இழிவுபட்டே நிற்கிறது ''ஒன்னவா மமொநொ'' (பெண்கள் பேய்கள்) ''ஒன்னநொசறுஜஇ'' (பெண்குரங்குப்புத்தி யுடைவள்) ஒன்னவாசன்நின் யொ

(12ம் பக்கம் பார்க்க)

SHABRA
UNICO FINANCE LIMITED
நிலையான வைப்பிற்கு 30% வழங்கும்
யாழ். நகரில் அதியுயர் வட்டி ஒரே நிறுவனம்
61, நியூ புலர்ஸ் வீதி, கொழும்பு - 4. தொ. பேசி. இல: 589310
207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ. பேசி. இல: 22073

## விசித்திரமான

(9ம் பக்கத் தொடர்ச்சி)

கரடிகளின் பின்னால் சென்று அவை தின்று மிகுதியாக விட்ட இரையை உண்டு இவை உயிர் வாழும். வேறு உணவு எதுவும் கிடைக்காது போய் விட்டால் இவை ஒன்றை ஒன்று பிடித்துத் தின்னத் தொடங்கிவிடும்.

தந்தை நரியே தாய்க்கும் குட்டிகளுக்கும் இரை தேடிக் கொண்டு வந்து கொடுக்கும். குளிர் காலம் முடிவடைந்தவுடன் இவற்றின் வெள்ளை நிறம் மாறிப் பழுப்பு நிறம் தோன்றுகிறது. கோடை கால முடிவில் மீண்டும் பழுப்பு நிறம் மாறி வெண்மை நிறமாகும். இவ்வேளைகளில் சில துருவ நரிகளின் தோற்றம் வேடிக்கையாக இருக்கும். உடல் முழுவதும் வெள்ளையாகவும் வால் மட்டும் நிறம் மாறிப் பாளுப்பாகவும் இருக்கும். இவை ஒட்ட வைத்தது போலிருக்கும். தமது வால்களைத் தூக்கிப் பிடித்துக் கொண்டே இவை அலையும். இந்த காட்சியை பார்க்க மிகவும் வேடிக்கையாக இருக்கும்.

## முரண்பாடுகளின்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக்காலத்தில் எங்கே இப்படி ஒரு பெண்?

நிறைவேறாத ஆசைகள் ஏமாற்றங்களாகப் பிரதிபலிக்கும் போது கோபம் உருவாவது இயற்கையே. ஆனால் இக்கோபத்தின் பலனாய் உயிர் உள்ளவரை சித்திரவதையை அனுபவிக்க நேருவதை 'வதை' காட்டுகிறது. புண்பட்ட உள்ளங்களுக்கு இது ஒரு பண்பட்ட கருத்தாக அமைகிறது.

பழைய நம்பிக்கைகளில் ஊறிப்போன மாமியாருடன் படித்த மருமகள் ஒற்றுமையாக இருப்பது அபூர்வமானது என்ற உண்மையை 'உள்ளத்தால் அடிமைகள்' உணர்த்தி நிற்கிறது. கோகிலா அவர்கள் தத்துவச் செல்வர் மிகச் சிறந்த சிந்தனையாளர் அவர்தம் சிந்தனைகள் நம்மைச் செம்மைப் படுத்தும். உயர்த்தும் மதிநலம் பெருக்கும்.

பதினறு ரூபா விலையுள்ள இந்த நூலைப் பெற விரும்புவோர் மகாஜனக் கல்லூரிப் புத்தகசாலை, பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம், மதிஅக்கடமி குரும்பசிட்டி போன்ற இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**திருமதி. ப. பாலசிங்கம்**

## தமிழர்-யப்பானியர்

(11ம் பக்கத் தொடர்ச்சி)

றெபாயகமாசிஇ'' (பெண்ணுக்கு மூன்று உலகங்களிலுமே இடமில்லை) ''சிச்சிநிள் நோகொ வொ நசு தொமோ ஒன்ன நிகொகொறெவொ யுறுசுன'' (ஏழு குழந்தைகளைப்பெற்றுத்தரக்கூடியவளானாலும் பெண்ணை ஒருபோதும் நம்பாதே) இதே போன்றே தமிழர் வாழ்வியலிலும் இடைக்காலத்தில் பெண் இழிவுபெற்றதால் பல பழமொழிகள் இன்று வழக்கிலிடம் பெற்றுள்ளன, பெண் பேயை ஒத்தவள் என்றும் அவள்புத்தி பின்புத்தியென்றும் இன்றும் பலர் எண்ணுகின்றனர். அத்தகையவர்கள் தமிழரிடையேயும் யப்பானியரிடையேயும் இருக்கின்றார்கள்.

(அடுத்த இதழில்முற்றும்)

# தர்மபராக்கிரமபாகு போர்ச்சுக்கீசருடன் வர்த்தக உடன்பாடு

**வெள்ளையர் இத்தீவில் காலூன்றியது எப்படி? - 2**

**ம. க. அ. அந்தனிசில்**

[இந்தியாவின் சில இடங்களைப் பிடித்துக் கொண்ட போர்ச்சுக்கீசர் இந்தியாவுடனான துருக்கியரின் பண்டமாற்று வர்த்தகத்தைக் குழப்புவதற்காக துலுக்க மரக்கலங்களைக் கொள்ளையடிக்கத் தொடங்கினர். இதன் தொடர்ச்சியாக ஓர் நாள் லோறன்சோவும் குழுவினரும் இந்து மகாசமுத்திரத்தில் நடமாடிய துலுக்க மரக்கலங்களைத் துரத்திச் சென்ற போது, அவை மாலைதீவுப் பக்கமாக விரைந்து மறைந்து விடவே சென்ற திசை தெரியாது மயங்கி நின்ற லோறன் சோவின் கப்பலை நீரோட்டம் இழுத்துவந்து இலங்கைத் தீவின் தென்கரையில் ஒதுக்கியது (இது நிகழ்ந்தது கோட்டை இராச்சியத்தை தர்மபராக்கிரமபாகு ஆண்ட கி. பி 1505ல் ஆகும். அப்போது யாழ்ப்பாண இராச்சியத்தைச் சங்கிலியனின் தந்தையான பரராஜசேகரன் ஆண்டு வந்தான்.) இந்த அந்நியரான வெள்ளைநிற மனிதரை முதன் முதல் கண்ட துறைமுகக் காவலர்கள் அந்த அந்நியரின் நடையுடை பழக்கம்பற்றியும், அவர்களின் துப்பாக்கி ஆயுதம் பற்றியும் மன்னன் தர்மபராக்கிரமபாகுவிற்குத் திருமுகம் அனுப்பினர். இந்திருமுகம் கண்டு வியப்பும், அதிர்ச்சியும் அடைந்த மன்னன் உடனடியாக மந்திராலோசனைச் சபையைக் கூட்டுகிறான். அவ்வமயம் சக்கரன் என்ற இராஜப்பிரதானி எழுந்து இந்த அந்நியரைப் பற்றித்தானே நேரில் சென்று, தகவல் அனுப்புவதாகச் சொல்லவே மன்னனும் அதற்குச் சம்மதிக்கிறான்]

### துருக்கியருக்கும் போர்ச்சுக்கீசருக்கும் ஏற்பட்ட பண்டமாற்றுப் போட்டி சிங்கள மன்னனை போரில் தள்ளியது!

### சக்கரனின் மடல்

அதன் பின்னர் லோறன் சோவும் குழுவினரும் நங்கூரம் பாய்ச்சியிருக்கும் துறைக்குச் சக்கரன் சென்று நிலைமைகளை ஊகித்தறியும் நிகழ்ச்சியில் ஈடுபட்டான். லோறன்சோவும் குழுவினரும் தம் நோக்கங்களை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டிருக்க மாட்டார்களாதலால், சக்கரனின் ஊகம் பிழையானதென்பதை அவன் மன்னனுக்கு எழுதிய மடல் மூலம் புரிந்து கொள்ள முடியும்.

சக்கரன் மன்னனுக்கு எழுதிய மடலின் சாரம் பின் வருமாறு;

''இந்த அந்நியர் நமக்குச் சாதகமாகவிருக்கிறார்கள். இவர்களை இரண களத்தில் எதிர்த்து நிற்க யாம் வல்லமை பெற்றிலோம். இவர்களுடன் ஐக்கியமாதலே நன்று''என்பதாகும்.

### பொருத்த சாதனம்

அந்நியர் எவரேனும் ஒரு நாட்டுக்குச் சென்றால் அந்நாட்டு மன்னனைச் சென்று சந்திப்பது சம்பிரதாயமாகும். இச் சம்பிரதாயத்தைக் கூட லோறன்சோவும் அவனது குழுவினரும் கடைப் பிடிக்கவில்லை. இந்த நிலையில் சக்கரன் ஒரு யுக்தி செய்தான். துறைமுகப் பகுதியில் லோறன் சோவுடன் நட்புப் பாராட்டிய ஒரு சிலரைத் தன்னுடன் கூடவே அழைத்துக் கொண்டு லோறன்சோவைச் சென்று மன்னனைத் தரிசிக்கும்படி தூண்டினான். எப்படியோ அதற்கிணங்கிய லோறன்சோ தன் குழுவின் ஓரிருவருடன் சென்று மன்னனைச் சந்தித்தான். மன்னனும் அவனுக்குத் தக்க சன்மானம் செய்ததுடன் அவனின் எண்ணங்களைக் கேட்டறிந்து எவ்வித மறுப்புமின்றி ஒரு பொருத்த சாதனம் எழுதிக் கொடுத்தான். போர்ச்சுக்கீசர் கொழும்பில் வர்த்தக சாலை அமைப்பதை அனுமதிப்பதே அப் பொருத்த சாதனமாகும்.

பொருத்த சாதனத்தைப் பெற்றுக் கொண்ட லோறன்சோ குழுவினர் வெற்றிக் களிப்புடன் திருப்பிச் சென்றனர்.

### போரும் தோல்வியும்

அதன் பின்னர் கி.பி.1517ல் லோப்பர் சுவாறிஸ் அல்பர் கேறியா என்பவன் பதினேழு கப்பல்களோடு கொழும்பையடைந்து முன்னர் தர்மபராக்கிரமபாகு லோறன்சோவுடன் செய்து கொண்ட பொருத்த சாதனப்படி வர்த்தக சாலை ஒன்றினையமைத்து அதைக் காப்பதற்கெனச் சொல்லி மண்ணுலோர் கோட்டையையும் கட்டியெழுப்பினான். இதைக் கண்ட துருக்கியர் இவற்றினால் தம் வர்த்தகத்திற்கு இத்தீவிலும் நாசம் வந்துற்றதெனப் பதைத்து இந்தியாவின் சில இடங்களில் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களையும் எண்ணி தர்மபராக்கிரமபாகுவிடம் சென்று முறையீடு செய்து அவனைப் போர்ச்சுக்கீசருக்கு எதிராகப் போருக்குக் கிளப்பி விட்டனர்.

துருக்கியரின் முறையீடுகளுக்குச் செவி மடுத்த தர்மபராக்கிரமபாகு யுத்த சன்னத்தனாய் தன் சேனையொடு கொழும்பையடந்து கடும் போர் புரிந்தும் ஈற்றில் தன் வீரர்களை இழந்து போர்ச்சுக்கீசருக்குப் பணிந்து அவர்களுக்கு வருடமொரு முறை கறுவா, இரத்தினம், யானையாதியன திறையாய்க் கொடுக்க உடன்பாடு செய்தான். இதன்பின்னர் அல்பர் கேறியா இருநூறு இராணுவ வீரர்களோடு ஜுவான்டே சில்வா என்பவனைக் கொழும்பிலே விட்டுவிட்டு இந்தியாவுக்குச் சென்றான்.

போர்ச்சுக்கீசர் இலங்கைத் தீவில் காலூன்றிய விதம் இதுவேயாகும்.

(முற்றும்)

# தேங்காய் இல்லாமல் கறி சமைக்கலாமா?

சமையலுக்குத் தேங்காய் அவசியமா?

எங்கள் சமையலில் தேங்காய் இன்றேல் சமையல் இல்லை என்றொரு நிலைவந்து விட்டது ஆம்சமையலும் தேங்காயும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து விட்டது. இதற்குக்காரணம் எமது நாட்டில் தென்னைமரங்கள் கூடுதலாக இருப்பதே

இன்று தேங்காயின் விலை தென்னையின் உச்சிக்கே சென்றுவிட்டிருக்கிறது: இதேவேளை தெங்குப் பொருள்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அரசாங்கம் இவற்றின் ஏற்றுமதியைக் குறைத்துக் கொண்டால் உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்வது கொஞ்சம் இலகுவாயிருக்கும். இதை விடுத்து அரச உதவி அமைச்சர் ஒருவர் ''தேங்காயை பத்துரூபா கொடுத்து வாங்கமுடியாதவர்கள் சோம்பேறிகள்'' எனக் கூறி இருப்பதாகச் செய்தி. இதைநினைத்து நாம்அழுவதா? சிரிப்பதா? என்றே தெரியவில்லை.

தேங்காயை அதிகமாகப் பாவித்தால் என்ன நன்மை கிடைக்கிறது? மேலும், தேங்காயை அதிகமாகப் பாவிப்பது இதய, வாத, நோயாளிகளுக்கும் கூடாது. அத்துடன் இளயவயதுடையவர்களுக்கும் பிற்காலத்தில் வாதம் ஏற்படுவதற்கிடமுண்டு. எனவே தேங்காய் இல்லாமல் சமைக்க நாமெல்லோரும் முன்வரவேண்டும். பாவிக்கும் தேங்காயையும் மிகச்சிக்கனமாகப்பாவிக்க வேண்டும்.

பொதுவாக தேங்காயைப் பொறுத்தவரையில் நாம் அதனைப் பூவாகவும் பாலாகவும் பாவிக்கிறோம். அத்துடன் தேங்காய் எண்ணெயும் எமது சமையலில் கலந்து விட்டது.

தேங்காய் பாவனையை மட்டுப் படுத்துவது எப்படி? தேங்காய்ப் பாலுக்குப் பதிலாக 'ரஜசோயா' வையும், உளுத்தம் மாவையும் சுடுநீரில் கரைத்துப் பாவிக்கலாம். ரஜசோயா மலிவு. உளுத்தம் மா பாவிக்க முடியாதவர்கள் ரஜசோயாவை மட்டும் பயன்படுத்தலாம். முருங்கைக்காய் போன்றகறிகளுக்கு இவற்றைப் போட்டால் தேங்காயை அரைத்துப் போட்டது போலவே மிகவும் நன்றாக இருக்கும். பொதுவாக இந்தியாவில் உள்ளவர்கள் செய்வது போலவே நாமும் காய்கறுகளை அவித்து வெங்காயம், மிளகாய், கடுகு, கறிவேப்பிலை தாளித்துக் கறி சமைத்து உண்ணப்பழக வேண்டும். குழம்பிற்கு 'ரஜசோயாவை' மட்டும் போட்டால் குழம்பு காரமாக இருக்கும். எனவே சிறிது தேங்காயையும் சேர்த்துக் குழம்பு வைக்கலாம். தேங்காய் எண்ணெய்க்குப்பதிலாக மரக்கறி நெய்யைப் பயன்படுத்தலாம்.

இவ்வாறு மாற்றுப் பொருட்களைப் பாவிப்பதால் ஓரளவு வீட்டுச் செலவைக் குறைக்கலாம்.

**அம்பிகா**

கீழே காணப்படும் குழம்பை ஒரு முறை செய்து பாருங்களேன்.

(1) வற்றல் குழம்பு

தேவையான பொருட்கள்.

துவரம்பருப்பு — 1 தேக்கரண்டி
பச்சை அரிசி — ½ தேக்கரண்டி
மிளகு — 1 ,,
சீரகம் — 2 ,,
மல்லி — 2 ,,
மிளகாய் — 8 (விரும்பிய அளவு) உப்பு, புளி — தேவையான அளவு கடுகு, உளுத்தம்பருப்பு, கறிவேப்பிலை, வெங்காயம்.

செய்முறை:

பச்சை அரிசி, துவரம் பருப்பு, மிளகு, சீரகம்,மல்லி, மிளகாய் என்பவற்றை வறுத்து அரைத்து, கறிவேப்பிலை,வெங்காயம் என்பவற்றையும் வைத்து அரைத்து எடுக்கவும். புளி, உப்புப் போட்டுக் கரைத்து கொதிக்க வைக்கவும்.வெங்காயம், கடுகு,உளுத்தம் பருப்பு, கறிவேப்பிலை என்பவற்றைத் தாளித்துக் கொட்டவும்.

★ வெந்தயக் குழம்பு: மேற்படி குழம்பு கொதித்ததும் வதக்கிய வெங்காயத்தைப் போட்டு வறுத்துப் பொடிபண்ணிய வெந்தயத்தையும் உழுத்தம்பருப்பையும் தூவிவிடவும்.

★ கத்தரிக்காய், முருங்கைக் காய் என்பவற்றை அவித்து இதே போல் குழம்பு செய்யலாம்.

★ பாகற்காய், வெண்டைக் காய் என்பவற்றை வதக்கி இதே போல் குழம்பு செய்யலாம். இவற்றால் எண்ணெய்ச் செலவைமீதப்படுத்தலாம்.

முருக்கங் கீரையைக் குழம்பு கொதிக்கும் போது உருவிப் போடலாம்.இதனால் சத்து அதிகமாகும்.

## பச்சோந்தி

(5ம் பக்கத் தொடர்ச்சி)

என்றார்.

மண்ணிறக்காரரோ ''அது மண்ணிறமில்லாவிட்டால் நான் அதனைவிழுங்கிவிடுகிறேன்'' என்றார்.

ஆசிரியர் பெட்டியைத்திறந்தார் உள்ளே இருந்த பச்சோந்தியின் நிறமோ வெள்ளையாக இருந்தது.

மூவரும் வாயைப் பிளந்தனர்.

# கன்னியர்க்குப் பெருமை தரும் கௌரி விரதம்

சௌபாக்கிய கௌரி விரதமானது பங்குனி மாதத்தில் வளர்பிறையன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. இம்முறை இங்கிலீசுக்கு ஏப்ரல் 4ந் திகதியன்று கூடுகின்றது (தமிழுக்கு பங்குனி 22) பெண்கள் அனுஷ்டிக்க வேண்டிய விரதங்களுள் இது ஒன்றாகும். நீண்டகாலம் திருமணமாகாத பெண்கள், திருமணமாகிக் கணவனால் கைவிடப்பட்ட

எஸ். உமாதேவி

பெண்கள், அல்லது வாழ்க்கையில் வேறு ஏதாயினும் தவிர்க்க முடியாத கஷ்டங்களுக்கு உட்பட்ட பெண்கள் யாவருக்கும் இவ்விரதத்தை அனுஷ்டிப்பதன்மூலம் நிவாரணம் அடையலாம், அது மட்டுமல்ல சகல சௌபாக்கியங்களும் கிட்டும். பெண்களுக்கு நோய், நொடி, பல்வேறு மனக் கஷ்டங்கள் ஆகியவற்றைத் தீர்க்க வேண்டின் கௌரி அம்பாளைத் தியானித்தல் சாலவும் சிறந்தது

## அனுஷ்டிக்கும் முறை

இவ்விரதத்தை அனுஷ்டிக்க வேண்டிய முறையாவது, விரத தினத்தன்று அதிகாலையில் எழுந்து தலைகுளித்த பின்னர், சுவாமி அறையிலே சாணியால் மெழுகி கோலமிடல் வேண்டும். ஒரு பித்தளைத் தட்டத்தினை நன்றாகத் துலக்கி துப்பரவாக்கி கோலத்தின் மீது தட்டத்தை வைக்கவேண்டும். அதன் பின்னர் குத்து விளக்கினை நன்றாகத் துலக்கி குத்து விளக்கின் ஐந்து வாயிலினிலும் மஞ்சள் பொடியை நீருடன் கலந்து குழைத்து பொட்டிடல் வேண்டும். அதன் மீது குங்குமத்தினாலும் பொட்டிடல் வேண்டும். பின்னர் இக் குத்துவிளக்கை பித்தளைத் தட்டத்தின் மேல் வைத்து குத்து விளக்கின் ஐந்து வாய்களுக்கும் நேரே தட்டத்திலேயும் ஐந்து இடங்களில் மஞ்சள் பொடியும் குங்குமமும் சேர்ந்த பொட்டை வைக்கவேண்டும். அதன் பின்னர் திருவிளக்கில் நெய்யூற்றி, திரியிட்டு விளக்கேற்றல் வேண்டும். ஊதுபத்தியையும் கொளுத்தி வைத்துக்கொண்டு கௌரி அம்மனுக்குரிய தோத்திரங்களைக் கூறிக்கொண்டு பூக்களினால் குத்துவிளக்கு எரிந்து கொண்டிருக்கும் தட்டத்தில் அர்ச்சனை செய்து வழிபடல் வேண்டும். இவ்விதம் விளக்கேற்றி பூஜை முடியுமட்டும் பெண்கள் குடிநீர், ஆகாரம் ஒன்றும் உட்கொள்ளக் கூடாது. நைவேத்தியமாக இயன்றளவு வடையோ, மோதகமோ, பாயாசமோ, சுண்டலோ, அவரவர்கள் வசதிக்கேற்ற விதமாக வைத்து வழிபடுதல் நன்று. அதன் பின்னர் அன்று சுவாமிக்கு வைக்கப்பட்ட நைவேத்தியத்தினையே உணவாக உட்கொள்ளலாம்.

## தீயவை நீக்கித் தூயவை பேண

பெண்கள் முக்கியமாகப் பொறாமை, வஞ்சகம், பிறர் பொருளுக்கு ஆசைப்படுதல், கோள் சொல்லல், பிறபெண்களைப்பற்றி போகவிட்டுப்புறம் சொல்லல் முதலிய தீயகுணங்களை ஒழிக்க வேண்டும். இத்தப் பெண்களாகிய நாம் கற்பு வழி, நல்லொழுக்கம் முதலியவற்றைப் பேணி நடத்தலே விரதம் இருப்பதற்குச் சமனாகும். எனவே பெண்கள் வாழ்க்கையில் தீயகுணங்களை ஒழித்து இதுபோன்ற விரதங்களை மேற்கொண்டு கடவுள் பக்தியுடன் ஒழுகி வந்தால் வாழ்க்கையில் நிச்சயம் நல்ல பயனை அடையலாம்.

## புலராத பொழுதுகள்...!

நாங்கள்!
வறுமை செடியில்
பூத்து மலர்ந்ததால்
திருமணக் கோவிலில்
அர்ச்சிக்கத் தகுதியற்ற
மலர்களாம்!
எங்களை கருவாக்கி
கவிஞர் பிழைக்கிறார்!
இலக்கிய சந்தையில்-
அவரின்
கவிதைக்கு அமோக
வரவேற்பு!
ஆனால் நாங்கள் இன்னும்
அழுகிய பழங்களே!
ஓ சீர்திருத்த வாதிகளே...
நிறுத்துங்கள் உங்கள்
கோஷங்களை...
எங்கள் வயிற்றின்-
கோஷம் இன்னும்
அடங்கவில்லை.
நீங்கள் கூவி-எங்கள்-
பொழுதுகள் விடியப்
போவதில்லை
அவை-
என்றும் புலராத
பொழுதுகளே!

—மண்டைதீவு
கலைச்செல்வி

## குப்பையிலே கோடி தனம்

குப்பையிலே கோடி தனம் என்றும், வேண்டாம் பொருளில் விழுமிய பயன் என்றும் கூறுவர். முற்காலத்தவர் ஒரு சருகையேனும் வீண்போகவிடாது குழிகளிட்டு உக்கவைத்துத் தமது வயல்களுக்கோ தோட்டங்களுக்கோ பசளையாகப் புதைத்து நல்ல விளைவைப் பெற்றனர். எங்கள் வீதிகள் ஒழுங்கைகள் குப்பை மேடுகளாக இருக்கின்றன. குப்பைகளை அள்ளி வீண் போகாதவாறு தங்கள் தோட்டங்களிலிட்டு முன்னோடிகளாக வழிகாட்டுபவர் முன்வருதல் விரும்பத்தக்கது. தோட்டங்கள் இல்லாதவர்கள் இவற்றை விற்றுப் பணத்தைச் சேகரிக்கலாம்.

குப்பையை எப்படியேனும் பயன் செய்வதால் உண்டாகும் நற்பயனோடு நகரமும் சூழலும் சுத்தமாகின்றன. நோய்கள் உண்டாகாமல் சுகாதாரம் நிலவுகிறது.

நன்றி!
மிக்க வைர்

## 'சுதுமலைச் சித்தர்' அண்ணாமலை



மண்ணில் வாழும் மாந்தர்க்கும் வறிஞர் தமக்கும்
பொருள் விரும்பா
தண்ணலேநீ மருந்தளித்தே அன்னை போல
ஆதரித்தாய்
கண்ணின் இமைபோல் கருணையுடன் காத்த
அண்ணாமலை நிருப!
விண்ணில வியுநா நோய்தீர்க்க மேன்றுயோ
வித்தகனே
அறிவிற் சிறந்த அன்புடைய அண்ணாமலையாம்
ஆரமுதே
துறவி போல வாழ்ந்தநீ தூயதொண்டு பல புரிந்தாய்
பிறவி நோய்க்கு மருந்தான பெருமான் பாதமதைச்
சேர்ந்தாய்
அறவோர் ஆறுமுகனருளால் ஆன்ம சாந்தி
அடைகுதியால்.

[சித்தஆயுள்வேத வைத்தியத்துறையில் சித்துக்கள் புரிந்த சுதுமலை வைத்தியபூபதி அண்ணாமலை அவர்களின் 77வது பிறந்த தினம் கடந்த 21-3-84ல் கொண்டாடப்பட்டது அன்னார் 1958ம் ஆண்டு நவம்பர் 26ம் திகதி அமரரானார் அப்போது அவரது பிரிவாற்றாது திருமுருக கிருபானந்தவாரியார் பாடிய இரங்கற் பாக்களில் சில இங்கு தரப்பட்டுள்ளன.]

## லெபனான் சமாதானப் பேச்சு வெற்றி பெறுமா?

உள்நாட்டுப் போரில் நீண்டகாலமாக ஈடுபட்டு நெருக்கடிகளிலும், அயல்நாடுகளின் தலையீடுகளிலும் இன்னொரு வியட்னாமாக மாறிக் கொண்டிருந்த லெபனானின் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் தொடங்கியிருப்பது இப் பிராந்தியத்தில் அமைதிக்கான அறிகுறியாகும்.

லெபனான் பிரச்சினைக்கு சமாதானப்படை என்ற போர்வையில் அமெரிக்கச் செல்வாக்கினை நிலைநாட்டுவதற்காக அனுப்பப்பட்ட அமெரிக்க மற்றும் மேற்கு ஐரோப்பியத் துருப்புக்கள் நிர்ப்பந்தம் காரணமாக வெளியேறினாலும் முஸ்லிம்களுக்காக சிரியப்படைகளுக்குப் போட்டியாகவும் லெபனானில் பாலஸ்தீன செல்வாக்கினை அகற்றுவதற்கு என்ற இஸ்ரேல் படைகளும் அங்கு நிரந்தரமாகவே நிலை கொண்டிருக்கின்றன.

ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்ரேலின் துணையுடன் தற்போதைய ஜனாதிபதி அமின் ஜமாயல் ஆட்சிபீடமேறியதைத் தொடர்ந்து லெபனானில் முஸ்லிம்-கிறிஸ்தவ உள்நாட்டு யுத்தம் உக்கிரமடைந்தது. கிறிஸ்தவரான அமின் ஜமாயலின் ஆட்சியை அகற்றுவதற்கு சிரியாவின் துணையுடன் பெய்ரூட் நகரையே அதிரவைத்துப் போராட்டம் நடத்திய ஒரு, இபாஸ் முஸ்லிம் தீவிரவாதிகளினது நிர்ப்பந்தத்தினால் "கடந்த வருடம் இஸ்ரேலுடன் செய்த ஒப்பந்தம்" ஜனாதிபதி ஜமாயலினால் கிழிக்கப்பட்டதைத் தொடர்ந்து லெபனான் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் சுவிற்சர்லாந்தில் தொடங்கின.

### பேச்சுக்கள்

எட்டு முஸ்லிம் தீவிரவாத தலைவர்களும் ஜனாதிபதி அமின் ஜமாயலும் தொடங்கியுள்ள இப்பேச்சுக்களில் சிரியாவின்

— 'சூரி' —

செல்வாக்கே ஓங்கியிருக்கிறது. பேச்சுவார்த்தைக்கு முஸ்லிம் தலைவர்களை இணங்கச்செய்வதற்கு ஜனாதிபதி ஜமாயல் சிரிய அதிபர் அஸாத்தின் துணையையே பெறவேண்டியிருந்ததினால் லெபனான் குறித்து சிரியா தெரிவித்த பல நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றவேண்டியவராகவே ஜமாயல் காணப்படுகின்றார். இதனால்தான் சிரியத் துணை அதிபர் பேச்சுக்களில் பிரதம பார்வையாளராகக் கலந்துகொண்டிருக்கின்றார்

வெளிநாட்டுப் படைகளை அகற்றுவதும், உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதுமே சுவிற்சர்லாந்து சமாதானப் பேச்சுக்களின் நோக்கமாயினும் இது எந்தளவுக்கு வெற்றிபெறும் என்பதில்தான் லெபனானின் எதிர்காலம் தங்கியுள்ளது.

### நியாயமான உரிமைகள்

பேச்சுவார்த்தையில் ஜமாயல் முன் வைத்திருக்கும் சமாதானத் திட்டம் முஸ்லிம்களுக்கு நியாயமான உரிமைகளை வழங்குவதாக உள்ளது. இப் போதைய நிலையில் லெபனானில் நிரந்தர சமாதானம் நிலவ கிறிஸ்தவர் தமது பல சலுகைகளை முஸ்லிம்களுக்கு

(16ம் பக்கம் பார்க்க)

HOME FINANCE Ltd.
வாகனங்கள் விற்பனைக்கு உண்டு.
1. ஒரு L 300 டெலிகா – 6சிற்றர் 1400 C C டிலிவரி வான் பெற்றோல் 1980-ம் ஆண்டு மொடல்
2. நிஸன் கரவல் டீசல் — 6 சிற்றர் 1980-ம் ஆண்டு மொடல்
தேவையானவர்களுக்கு கடனுதவி வழங்கப்படும்.
விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
ஹோம் பினான்ஸ் லிமிட்டெட்,
82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 24310

விசேட அறிவித்தல்
இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பாடநெறிகள்
கல்வியாண்டு 84/85க்குரிய
விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது
G A.Q., FIRST IN COMM, FIRST IN LAWS ஆகிய பாடநெறிகளுக்கு பதிவு செய்ய விரும்பும் மாணவர்கள் விண்ணப்பப் படிவங்களை 28-3-84 வரை பெற்றுக்கொள்ளலாம்.
G. C. E A/L பரீட்சையில் 3 பாடங்களில் சித்தி அடைந்தவர்கள் மேற்குறிப்பிட்ட பாட நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்ப முடிவு திகதி 28-3-84
புதிய பிரிவு ஆரம்பம்: 1-4-84
REGISTRAR,
ASTAN INSTITUTE
166/1, HOSPITAL ROAD, JAFFNA.

# அன்றைய மாணவர்கள்

# கண்விழித்துப் படித்தார்கள்

# இன்றைய மாணவர்களோ

# கண்விழித்து

# வீடியோ பார்க்கிறார்கள்

"இன்று ரஞ்சன் வீட்டில் இரவிரவாகப் போடப் போகினம்."

"நாளைக்குத் தேவி வீட்டு 'பேதீட் பாட்டி'யில மூன்று படம் போடுகினமாம்"

"நேற்று மூன்று படம் பார்த்திட்டுப் படுத்த மோகன் இன்னும் நித்திரையால எழும்பவில்லை."

மேற்குறிப்பிட்ட வாக்கியங்கள் இன்று சர்வசாதாரணமாக நாம் கேட்பவைகளாகும் இதைவிட ரி.வி., டெக், கசெற், வீடியோ என்னுஞ் சொற்கள் பின்னஞ்சிறுசுகள் முதல் வயது வந்தோர்வரை நாள் தோறும் உச்சரிக்கும் சொற்களாகிவிட்டன. சுருக்கமாகக் கூறின் ரி.வி.யும், டெக்கும் மக்கள் வாழ்க்கையில் ஒன்று கலந்து மக்களையும் இவற்றையும் பிரிக்கமுடியாது என்று கூறும் அளவிற்குப் பிரபல்யமாகிவிட்டன.

பொதுஜனத் தொடர்பு சாதனங்களில் ஒன்றாகிய ரி.வி. என்ற தொலைக்காட்சி எமது நாட்டிற்கு அறிமுகமானபோது வானொலி, பத்திரிகை போன்ற பிற பொதுஜன தொடர்பு சாதனங்களிலும் பார்க்க நாம் கூடிய பயனைப் பெறப்போகிறோம் என்று மகிழ்ந்தோம்.

இந்த மகிழ்ச்சியும் நம்பிக்கையும் இன்று எம்மிடம் இல்லாமல் போய்விட்டது. மாணவர்கள் தமது வேலைகளை மறந்து ரி.வி.யுடன் பொழுதைப்போக்குகிறார்கள் என்று பல பெற்றோர்கள் குறைப்பட்டுக்கொள்கின்றனர். சரியாக மாணவர்கள் படிக்கும் நேரத்தில் ஆரம்பமாகும் தொலைக்காட்சி நிகழ்ச்

மிகப்பழைய படம் முதல் வெகு அண்மையில் வெளியான படம்வரை இலகுவாக வாடகைக்கு எடுக்கக்கூடியதாக வீடியோ கிளப்புகளில் இருக்கின்றன வீட்டில் ரி.வி.யும், டெக்கும் இருக்குமானால் பத்து ரூபாவோடு ஒரு படத்தை முழுக்குடும்பமுமே பார்த்து மகிழ்ந்திட முடியும். ஆம், ஒரு கசெற்றுக்குப் பத்து ரூபாவே வாடகையாக இன்று அறவிடப்படுகிறது. வீட்டில் ரி.வி. இருந்தால் எழுபத்தைந்து ரூபாய் வாடகைக்கு 'டெக்' எடுக்கமுடியும். ரி.வி; டெக் இரண்டும் இல்லாவிட்

ராதா, பிரபு, சரிதா என்று இன்னோரன்ன சினிமா நட்சத்திரங்களின் பெயர்கள் இவர்கள் வாயில் தம்குடும்ப அங்கத்தவர்கள் பெயர்கள் போல சாதாரணமாக உச்சரிக்கப்படுகின்றன வீடியோவில் படம் பார்க்கும் பழக்கம் அதிகரிக்கவே இவர் தமது நடை, உடை, பாவனை என்பவற்றையே தாம் விரும்பிய நட்சத்திரம் போல மாற்றிக்கொள்கிறார்கள்.

ஒரு புராணப்படத்தையோ, பக்திப்படத்தையோ பார்க்கும் போது 'அலுப்புப்படம்' என்று கூறும் மாணவர்கள் சமுதாயச்

**யோகேஸ் கணேசலிங்கம்**
(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

நூற்றிஐம்பது ரூபாவுக்கு இரண்டையும் வாடகைக்கு எடுக்கலாம். இப்படியாக ரி.வி: டெக் இரண்டையும் வாடகைக்கு எடுத்துப் பார்க்கும் போது ஒரு படத்தைப் பார்ப்பது நட்டம் என்ற எண்ணத்தில் மூன்று, நான்கு படங்களை இரவிரவாகப் போட்டுப் பார்த்துத் திருப்தியுறுகிறார்கள். மேலும், பல சந்தர்ப்பங்களில் இப்பணத்தை இரண்டு மூன்று குடும்பங்கள் பங்காகப் போட்டுப் படம் பார்க்கிறார்கள். மாதத்தில் ஒருமுறை தியேட்டருக்குச் சென்று படம் பார்ப்பதைக் காட்டிலும் வீட்டிலிருந்தபடியே வீடியோ மூலம் படம் பார்ப்பது மலிவானதும், சுலபமானதும் என்று அவர் சொல்கிறார்கள். அத்தோடு குடும்பத்தோடு பல்லியோ

சீரழிவு, கொலை, கொள்ளை படுகொலை நடக்காட்சிகள் கொண்ட ஒரு படத்தை ரசித்துப் பார்க்கின்றனர். இவர்களது ரசனையும் விருப்பமும் சினிமா உலகோடு தொடர்புடையதாக மாறிவருகின்றது.

விடுமுறைக் காலங்களில் மாணவர்கள் பிரயோசனமான வழிகளில் பொழுதைக் கழிக்க வேண்டும் கதைகள், கட்டுரைகள் வாசித்தல், கூட்டமாகச் சேர்ந்து கிரிக்கெட், உதை பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடுதல், பெண்களாயின் சமையல், தையல், பின்னல் என்பவற்றைக் கற்றல் எனப் பொழுதைப் பயனுள்ள வழிகளில் செலவழிக்கலாம் ஆனால் இன்று வீடியோ பார்ப்பதில் பல மணி நேரத்தைச் செலவிடுகின்றனர். விடுமுறை நாட்களில் யாரோ ஒருவர் வீட்டில் மூன்று, நான்கு படம் போடுகிறார்கள் என்று இரவிரவாகமுழித்திருந்து படம் பார்த்துவிட்டு அடுத்த நாள் பகல் முழுவதும் தூங்கிவழிகிறார்கள். இதனால் தாம் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய முடியாது தவிக்கின்றார்கள்.

ஒரே இடத்தில் இருந்து பல மணி நேரமாகப் படம் பார்ப்பதால் உடலுக்குத் தேகாப்பியாசம் இல்லாதுபோகின்றது. தொடர்ந்து கண்விழித்திருப்பதால் கண் எரிச்சல்உண்டாகின்றது,பிற்காலத்தில்கண்பார்வை குறைவதற்கும் இளம் வயதிலேயே கண்ணாடி அணியும் நிலையேற்படவும் இவை வழிவகுக்கின்றன. இதனால் இளஞ் சந்ததியினரின் உடல் நலம் பாதிக்கப்படுகின்றது.

மாணவர்கள் முக்கியமாகத் திருத்திசெய்யவேண்டிய வாசிக்கும் பழக்கம் வீடியோ அறிமுகமான பின்னர் வெகுவாகக் குறைந்துவிட்டது ஒரு படத்தைப் பார்க்கத் தொடங்கினால் நேரம்போவது தெரியாமல் இரண்டு, மூன்று மணி நேரத்தை விணடித்துவிடுவார்கள். இந்த ரீதியில் மூன்று, நான்கு படங்கள் என்று பார்த்துவிட்டுப் பார்த்த படம் எது, கதை என்ன, நடிகர்கள் யார் யார் எனச் சொல்லத் தெரியாமல் ஒரே மயக்கத்தில் இருப்பவர்களையும் காண்கிறோம். இவர்கள் தமது நேரத்தையும்

## ஒரே இரவில் பல படங்களைக்

## கண்விழித்துப் பார்ப்பதால்

## படக்கதைகளை நினைவு படுத்துவதில்

## குழப்பமாயிருக்கிறது-

## உடல் நலம் பாதிக்கப்படுகிறது

சிகள் மாணவர்கள் படிப்பில் கவனஞ் செலுத்துவதைத் தடைசெய்கின்றன.

ஆனால் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும்பார்க்க வீடியோவில் படம் போட்டுப் பார்ப்பதால் மாணவர்கள் பல வழிகளில் முன்னேற்றப்பாதையில் செல்வதில் தடைப்படுகின்றனர். இன்று இலங்கையின் ஏனைய பகுதிகளைக் காட்டிலும் யாழ்ப்பாணத்திலேயே வீடியோ கிளப்புக்கள் கூடுதலாக இருக்கின்றன. நாள் தோறும் புற்றீசல் போல தோன்றும் வீடியோ கிளப்புகளும், பொதுமக்கள் அவற்றுக்குக் கொடுக்கும் ஆதரவும்; மக்கள் மத்தியில் வீடியோவில் படம் பார்க்கும் பழக்கம் அதிகரித்துவருவதைச் சொல்லாமல் சொல்கின்றது.

சென்று ஒரு படம் பார்க்கச் செலவழிக்கும் பணத்திற்கு மூன்று படம் பார்க்கும் வாய்ப்பு வீட்டிலிருந்தபடியே கிடைக்கிறது. இவைபோன்ற பல வாய்ப்புக்களையும் வசதிகளையும் அனுபவிக்கும் இன்றைய மாணவர்கள் பல தீய பழக்கங்களுக்குத் தம்மையும் அறியாது அடிமையாகிறார்கள் என்பதை நாம் மறுக்கமுடியாது.

உலக விவகாரம், விளையாட்டுத்துறைச் செய்திகள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் என்பனபற்றி அறிந்து கொள்வதில் மாணவர்கள் கவனஞ் செலுத்தாது, சினிமா, நட்சத்திரங்கள், அவர்கள் வாழ்க்கை பற்றிய 'கிசுகிசு' செய்திகள் என்பனற்றை அறிந்துகொள்கின்றனர். ரஜனி, கமல், சிலுக், இவர்கள்

செலவழித்துத் தமது தூக்கத்தையும் கண்ணையும் வீணடித்தவர்களாவர்.

இவ்விதமாகவீட்டில் இருந்தபடியே குறைந்த செலவில் படம்பார்க்கிறோமென்ற திருப்தியில் எம்மை நாமே ஏமாற்றிக்கொண்டு போவோமானால் வெகு விரைவிலேயே எமதுசமுதாயம் சீரழிந்துவிடும்.

## ● அனீத்தாவின் துணிச்சல்

கடந்த ஆண்டு இராணுவ ரோந்து யாழ்ப்பாணத்தில் மும்முரமாக இருந்தவேளை இருவரை இராணுவத்தினர் வீதியில் வைத்துத்துப்பாக்கி முனையில் மறித்தனர் அந்தநிலைமை அவ்விரு இளைஞர்களின் உயிராபத்து அச்சத்தை ஊட்டியது இதுபற்றி திருமதி அனீத்தா நேசையாவுக்குத் தகவல் கிடைத்தது அவர் உடனடியாகச் செயலில் இறங்கினார்.

தமக்குக்கிடைத்ததகவலை அரசாங்க அதிபரான தமது கணவருக்குத் தெரிவித்து நேரத்தை வீணடிக்க அவர் விரும்பவில்லை. நேரடியாகவே அனீத்தா நேசையா அப்போதைய யாழ்ப்பாணப்பகுதி இராணுவத்தளபதியுடன் தொடர்புகொண்டார். இதனைத்தொடர்ந்து துப்பாக்கிமுனையில் வைக்கப்பட்டிருந்த அந்த இருவரும் ஒருசிலநிமிடங்களில் விடுதலையாகினர் திருமதி அனீத்தா நேசையாவின் துணிவையும், கருணையுள்ளத்தையும் வெளிப்படுத்துவதாக இச்சம்பவம் அமைந்திருந்தது.

கடந்த திங்கட்கிழமை ரோட்டறிக்கழக மதியபோசன விருந்தொன்றில் சட்டத்தரணி ஆர். பாலசுப்பிரமணியம் இதனைத் தெரிவித்தார்.

'அனந்த்'

## யாழ்ப்பாணத்தில்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

109 புறட்டஸ்தாந்துப் பள்ளிக்கூடங்களும் (தமிழும் ஆங்கிலமும்), 24 கத்தோலிக்கப் பள்ளிக் கூடங்களும் இருந்தன. இக்காலத்தில் புரட்டஸ்தாந்து மிஷனரிமாருக்கே அரசாங்கத்தின் ஆதரவிருந்தது. அவர்களுடைய பள்ளிக்கூடங்களுக்கு மாத்திரமே பணஉதவிகொடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் மிஷனரிமார் ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவ நினைக்க, யாழ்ப்பாண இந்துக்கள்பிராமணர் தலைமையில் யாழ்ப்பாணத்தில் ஒரு ஆங்கிலப் பாடசாலையை நிறுவ வேண்டும் என்றும் அப்படிச் செய்யாவிட்டால் இந்துக்கள் தொடங்கும் ஆங்கிலப்பாடசாலைக்கு நன்கொடைகொடுக்க வேண்டும் என்றும் மனுப்பண்ணினர். இதற்குப் பதிலாக அரசாங்கம் மிஷனரிமாரை யாழ்ப்பாணத்தில் ஆங்கிலப் பாடசாலையை நிறுவும் பொருட்டு அனுப்பியது இவர்களின் நோக்கம் இப்பாடசாலை, மூலம் பிள்ளைகளைக் கிறிஸ்தவர்களாக்குவதே. இச்சந்தர்ப்பத்தில் கல்கத்தா, பம்பாய் சென்னை முதலிய இடங்களில் இந்துக்களே முதன்முதலில் ஆங்கிலப் பாடசாலையை நிறுவினர் என்பதை அறிந்து மகிழ்ச்சியடையலாம். ஆரம்பகாலத்தில் ஆங்கிலத்தில் ஆங்கிலேயர் டச்சுக்காரரின் முப்பத்திரண்டு கோவிற்பற்றுக்களிலும் மறுபடியும் பள்ளிக்கூடங்களை நிறுவி அவற்றைக் கொழும்பு ஆர்ச் டீக்கன் தலைமையில் விட்டனர். ஆனால் 1834ம் ஆண்டளவில் இந்த முப்பத்திரண்டு பாடசாலைகளில் நான்குமட்டுமே எஞ்சி இருந்தன. 1834ம் ஆண்டில் கோல்புறூக் ஆலோசனைப்படி ஆர்ச் டீக்கன் பாதிரிமார், அரசாங்க அதிபர்கள், அரச உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு பாடசாலைக் கொமிஷனை நியமித்தனர் இந்தக் கொமிஷன் அரசாங்க பாடசாலைகளிலேயே கவனம் செலுத்தியது.

(இன்னும் வரும்)

## தாயும் கடவுளும்

● விரதம் என்பது பிறர் சொல்லும் கொடூரமான பேச்சுக்களைப் பொறுப்பது; எந்த உயிர்களையும் கொல்லாமல் இருப்பதுதான்.

● பெற்றோர் பழக்கம் தான் பிள்ளைகளுக்கும் வரும். ஆகவே நல்ல பழக்கங்கள் உண்டாகத் தாய் தந்தையர் ஒழுக்கமாக இருக்க வேண்டும்.

● தாயைத் தன் மகன் மறந்தாலும், தாய்ப்பாசம் நீங்காது. கடவுள் இல்லை யென்று மனிதன் சொன்னாலும் கடவுளின் கருணை மனிதர்களிடத்தில் நீங்குவதில்லை.

● எந்தப் பாவம் செய்தாலும் போக்கிக் கொள்ளலாம். நன்றி மறந்த பாவத்தைப் போக்க முடியாது.


● தன் மனைவி தான்பிறந்த வீட்டில் எல்லோரையும் துறந்து தன்னோடு வந்தாளே என்று அன்புகாட்ட வேண்டியது கணவனே.

தொகுப்பு:
'பிலோராம்சந்த்'

## 'ஹோட்டல் எவரெஸ்ட்வியூ'

ஹோட்டல் எவரெஸ்ட் வியூ'- இதுவே உலகில் அதி உயரத்திலுள்ள ஹோட்டல், நேபாளத்தில் 15,000 அடி உயரத்திலுள்ள மலைச் சிகரமொன்றில் இது அமைக்கப்பட்டுள்ளது இந்த உயரத்தில் காற்று மிகவும் அரிதாகவே இருக்கிறது. இதனால் இந்த ஹோட்டலின் 12 இரட்டைப் படுக்கை அறைகளுக்கு "ஒக்சிஜன்" கொள்கலன்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஏனைய ஹோட்டல்களில் 'ஏயர் கண்டிஷன்' பொருத்தப்பட்டிருப்பதுபோல.

நன்றி:
ரீடர்ஸ்டைஜஸ்ற்'



"கிரிக்கெட் சீசன் ஆரம்பமாகிட்டு வந்து இந்து பிடிக்காம விருக்க முன்னேற்பாடாகத் தேரை முடிச்செப்பிச்சுட்டேன்"

இயேசு காவியத்தில் இரண்டாவது பாகமாக அமைக்கப்பட்டிருக்கும் தயாரிப்பு' என்னும் பகுதி எட்டுப்பக்கங்களில் உள்ளது. மிகவும் சிறிய பாகமாகிய இதற்கு 'தயாரிப்பு' என்ற புதுமையான தலைப்புக் கொடுக்கப்பட்டதன் பொருள் என்ன?

ஆதிப் பெற்றோர் செய்த பாவம் அந்தம்வரை தொடர்ந்து வராமல் பாதியிலேயே மீட்கப்படவேண்டும் என்ற இறைவனின் திட்டப்படியே மெசியா உலகிற்கு அனுப்பப்பட்டவர். சாதாரண மனிதரைப்போல் பிறந்து வந்தாலும், பிறப்பிலும் வளர்ப்பிலும் பல்வேறுபட்ட அமைப்பிலும் தெய்வீகத்தன்மை அவரிடம் குடிகொண்டிருந்தது. இவ்வாறான இயேசுவின் வரலாறு பிறப்பில் மிகவும் சிறப்பாக மீண்டும் தொடருகின்றது. உலக மக்களிற்கு மெசியா முழுமையாக இனம் காட்டப்படுகின்றார்.

## தயாரிப்பு

திட்டம் ஒன்று நிறைவேற்றப்படமுதல் அதற்கான தயாரிப்புக்கள் அவசியம். தயாரிப்பின் சிறப்பிலேயே திட்டத்தின் வெற்றி தங்கியிருக்கின்றது. எம் சாதாரண வாழ்க்கையின் நிகழ்வுகளை எடுத்துப் பார்த்தால் இது தெளிவாகப் புரியும். பரீட்சைநெருங்கும் சில மாதங்களுக்குமுன்னரேயே பரீட்சைக்கான தயாரிப்புக்களில் உரியவர்கள் இறங்கிவிடுகின்றனர். விளையாட்டுப் போட்டிகள் வருமுன்னரேயே வீரர்கள் அதற்கான தயாரிப்புக்களில் இறங்கிவிடுகின்றனர். வாழ்க்கையின் எந்த நிகழ்விலும் மனிதன் அதற்கான தயாரிப்புகளை மேற்கொண்டு கொண்டேயிருக்கின்றான். தயாரிப்பு-முன்ஆயத்தம் இல்லாத எந்தவொரு திட்டமும் எந்தப் பெரியவலிமையிருந்தாலும் தோல்வியுற்றேதீரும். இதற்குசான்றுகள் சொல்லித் தெரியவேண்டிய அவசியமில்லை இதேநேரத்தில் கவிஞர் கண்ணதாசனும், இயேசுவினால் மேற்கொள்ளப்படும் சில விடயங்களை முன்ஆயத்தங்களாக எடுத்து ''தயாரிப்பு'' என்ற தலையங்கத்தில் புதிதாக பிரித்திருப்பது சிறப்பாக உள்ளது.''

## திருமுழுக்கில்

## தயாரிப்பு

இயேசு கருத்தரிப்பதற்கு ஆறு மாதத்திற்கு முதல் கருத்தரித்த அருளப்பர் என்பவர் இயேசுவின் தயாரிப்பிற்கு உதவி புரிகின்றார். பழைய ஏற்பாட்டின் இறுதிநபராகவும், இயேசுவின் முன்னோடியாகவும் கருதப்படும் இவரின் கையினால் இயேசு திருமுழுக்குப் பெறுகின்றார். காவலன் காலணி கழற்றும் அளவு தகுதிகூட இல்லாத கிறீயோனின் கையினால் இயேசு திருமுழுக்குப் பெறுவதினால் தாழ்ச்சியின் மூலம் தயாரிக்கப்படுகின்றார். அத்தோடு முதலாம் ஆளாகிய பிதாவின் மூலம், மூன்றும் ஆளாகிய தூய ஆவியின் மூலமாகவும், இரண்டாம் ஆளாகிய 'சுதன்' ஏககாலத்தில் இனங்காட்டப்படும் முதல் சம்பவம் இதுவாகையால் தயாரிப்பின் முதற்கட்டம் திருமுழுக்கேயாகும். இதனால் கவியரசன் இதனைக் காவியத்தின் ''தயாரிப்பில்'' முதல் வைத்துள்ளார்.

## நோன்பில்

## தயாரிப்பு

எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து இஸ்ராயேல் மக்களை மீட்டுமுன்னர், காட்டுக்கிரைகளை உண்ணும் கசப்பான பாலைவன வாழ்வின் மூலம் மோயீசன் தயாரிக்கப்பட்டார். தலைமைத்துவத்திற்குரிய ''பொறுமை' என்னும் தகைமையை அவ்நோன்பு வாழ்வு மூலம் பெறுகின்றார் மோயீசன். இன்றும் இயேசு உண்ணு நோன்பு இருப்பதற்காக பாலைவனத்திற்கு பரிசுத்த ஆவியின் மூலம் இட்டுச் செல்லப்படுகின்றார். இதைக் கண்ணதாசன்

''புனிதப்பணியில்
புகுந்திடுமுன்னால்
பரிசுத்த ஆவி பாலை
வனத்திற்கு
இயேசுவை உடனே
இட்டுச்சென்றார்''

என்று சொல்லுகின்றார் இதில் 'புனிதப்பணியில் புகுந்திடும் முன்னால்'' என்னும் வரியில், இயேசு தயாரிக்கப்படுவதனைத் தெளிவாகக் காட்டுகின்றார். அதாவது 'மீட்பு' என்னும் புனிதப் பணியினை அவர் இன்னமும் மேற்கொள்ளவில்லை அதற்கான தயாரிப்பு மூலமாகவே

# இயேசு காவியத்தில்

# இயேசுவின் தயாரிப்பு

எடுத்துக்கூறப்பட்டு பின்னர் பன்னிரண்டு வயதில் காணாமல் போனது தவிர்ந்த அவரது முப்பதுவருட வாழ்க்கை எந்த சுவிஷேடகராலும் எடுத்துரைக்கப்படவில்லை. அது ஒரு மறைந்த வாழ்க்கையாகவே கருதப்படுகின்றது. எனினும் இயேசு காவியத்தில் கண்ணதாசன் இயேசுவின் வளர்ச்சியினை வளர்ந்து வலிமை பெறுகின்றார்'' என்ற தலைப்பில்

''எடுத்தவர் இடத்தில்
அன்புகாட்டியும்
ஆடல் பாடல்
இல்லாதிருந்தும்
இழந்தோர் இடத்தே
இரக்கம் மிகுந்தும்
சகைகதவி இதயம்
மலர்ந்து
உறவோர் இடத்து
உள்ளன்பு வைத்தும்...''

என்று அகர வரிசையில் தொடங்கி.

''குணத்தில் தேவகுமார
னென்றுலகம்
கூப்பிவணங்கி குறைகள்
இல்லாமலும்
கெட்டபழக்கம் எட்டா
நிலையிலும்
கேடுகள் எதையும்
நாடாதனவில்
கைத்தனத்துள்ளே காலத்தை
அடக்கியும்...''

என்று சீர்வரிசை தவறுமல் கூறுவதிலிருந்து இயேசுவின் மறைந்த வாழ்விலும் சீரான வளர்ச்சியினையும், புனிதநிலையும் காட்டுகின்றார். மறைந்த வாழ்ந்த இயேசு, இறைவனின் திட்டத்தினை மறந்து வாழவில்லை. மீட்புத்திட்டத்தின் நிறைவேற்றலுக்காக தனது முப்பதாவது வயதில் காலடி எடுத்து வைக்கின்றார் அந்தப் பருவத்தில் அவரின் சரித்திரம்

இவை இதையுணர்ந்துதான் கண்ணதாசன் இயேசு பாலைவனத்தில் தோன்பு இருந்ததை ''தயாரிப்பு'' என்னும் பாகத்தில் அடக்கியுள்ளார்.

## சோதனையில்

## தயாரிப்பு

''இளைத்தும் களைத்தும்
இருக்கும் யேசுவைத்
தொடர்ந்து சென்று
சோதனை நடத்த

அலகை அன்று ஆங்கே
வந்தது!''

என்று இயேசுவின் சோதனை வாழ்க்கையினை ஆரம்பிக்கின்றார் கண்ணதாசன். இப்பகுதி ''தங்கம் புடமிடப்படுகின்றது'' என்னும் தலைப்பினைக் கொடுத்திருக்கின்றார். ''தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் தரத்தினிலே குறைவதுண்டோ'' சுடச்சுட ஒளிரும் தங்கம்போல இத் 'தங்கமும்', இங்கு புடமிடப்படுகின்றது. அதாவது பிதாவைப் பெருமைக்காக இங்கு புடமிடப்படுவதன் மூலம் தயாரிக்கப்படுகின்றது. ஒரு தடவையல்ல, இரு தடவையல்ல, மூன்று தடவைகளில் அலகையின் சோதனை

(16-ம் பக்கம் பார்க்க)

அ. அமிர்தருஜ்


ராணி (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
கமலஹாசன்-மாதவி
டிக் டிக் டிக்
(சங்கலர்)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம் வாசல் இதயம்

வெல்லி (மானிப்பாய்)
தினசரி 3-30, 6-30
பாக்கியராஜ் - அம்பிகா
அந்த ஏழு நாட்கள்

மனோகரா (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன் - ஜெய்சித்ரா
இன்ஸ்பெக்டர்மனைவி
(புதிய பிரதி)

சாந்தி (யாழ். நகர்)
25 - 27
தினசரி 10-30, 3-0, 4-45. 7 00 p M.
NIGHT OF THE SEA GUL
Horror - action - color

From 24th to 26
வின்ஸர் (யாழ். நகர்)
தினசரி 5 காட்சிகள்
Brad Davis - John Hurt in
MIDNIGHT EXPRESS
The highly Controversial movie of the Decade
நீங்காத நினைவை பார்ப்போர் மனதில் பதிக்கும் ஒப்பற்ற ஓவியம்
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

மகத்தான
85வது மகளிர் தினம்
ஸ்ரீகல் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,



பயணங்கள் முடிவதில்லை
கடைசி சந்தர்ப்பம்

லிடோ (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவீந்தர் - ரூபா
ஒரு தலைராகம்

அநேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க 26-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வெலிங்டன்
தினசரி 10 30 3-15, 4-30, 7-00, 9-15
Harrison Ford, Laren Allen in
RAIDERS OF THE LOST ARK
(more suitable for adults)
(Color)
Steven Spielberg's most sucessfull film

இதுவே கடைசி வாரம்
ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 3-30, 6-00 9-00
கமல்—ஸ்ரீதேவி— இசை
மீண்டும்கோகிலா
(சங்கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30 9-30
சோமயாஜுலு - மஞ்சு பார்கவி
சங்கராபரணம்
(கலர்)
நாளை முதல்
A BRIDGE TOO FAR

விளம்பரம்
வெற்றுச் சாக்கு விற்பனை
எமது சங்கத்தில் சுமார் 3500 வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனையாக உள்ளது இவற்றிற்கான விண்ணப்பங்கள் யாவும் சங்கத்தில் ரூபா 2/- செலுத்திப்பெற்ற விண்ணப்ப படிவங்களில் முத்திரையிடப்பட்ட உறைகளில் வைத்து 27-3-84 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணிக்கு முன்பாக சங்க காரியாலயத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். கடித உறையில் இடதுபக்க மேல்மூலையில் வெற்றுச்சாக்கிற்கான கேள்விப்பத்திரம் எனக் குறிப்பிடவும்.
கேள்விப்பத்திர பணவைப்பு ரூபா 500/ ஆகும்.
பொதுமுகாமையாளர்
அளவெட்டி மல்லாகம் ப. நோ. கூ. சங்கம்.
1573


## 31-ம் நாள் நினைவஞ்சலி

திருமதி கந்தையா விசாலாட்சிப்பிள்ளை

மலர்வு: 30 03-1894 உதிர்வு: 24 02-1984



பாசத்தால் பிணைந்து அன்பால் உயர்ந்து எம்மை எல்லாம் அரவணைத்த எம் அன்பு அன்னையே, தங்கள் உயிர் உடலைவிட்டு அகன்ற போதும் நீவிர் ஏற்றி வைத்த பாச ஒளி எங்கள் உள்ளங்களில் என்றும் நிறைந்து நிற்கும். தங்கள் ஆன்மா சாந்தி அடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன். 1581

## நினைவஞ்சலி

றெபேக் மேரி ஆச்சிரியம் — றெபேட் நீற்று யூலியானா

தோற்றம்: 31-12-1946 மறைவு: 19-8-1983

தோற்றம்: 20-12-1963 மறைவு: 24-3-1983



நீறுகி ஆறுத வேகின்ற நெருப்பாக எம் நெஞ்சம் ஆறுத எரியவிட்டு சேயோடு ஆறுதற்கோ தாயோடு சென்றனையோ.

இவர்களின் ஆத்ம சாந்திக்காக உரும்பராய் புனித மிக்கேல் ஆலயத்தில் 24-3-84 அன்று 6-00 மணிக்கு இரங்கற் பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

பிரிவால் துயருறும்
திருமதி வடிவேல் யேசிங்கம் குடும்பத்தினர்
பாலா, பாபு, யாமினி, சோபா.

உரும்பராய். 1595

